வருடாந்த அறிக்கை

2016





தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை



2016

வருடாந்த அறிக்கை

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

உள்ளடக்கம்

பக்கம்

கௌரவ தலைவரின் கூற்று

பொது முகாமையாளரின் கூற்று

1. பொது

1.1 அறிமுகம் 1
எமது நோக்கு 1
எமது பணி 1
எமது நோக்கங்கள் 1
குறிக்கோள் 1
1.2 கூட்டிணைத்தல் தகவல்கள் 2
1.3 பணிப்பாளர் சபை 3
1.4 கூட்டிணைத்தல் முகாமைத்துவம் 4
1.5 எமது பிரதான செயற்பாடுகள் 5

2. கூட்டிணைக்கப்பட்ட நிர்வாகம்

2.1 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 7
2.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 7
2.3 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 7
2.4 உள்ளக நிர்வாகம் 7
2.5 நிறைவேற்று முகாமைத்துவம் 8
2.6 இடர் முகாமைத்துவம் 8
2.6.1 திரவத்தன்மை அபாயம் 8
2.6.2 சந்தை அபாயம 8
2.6.3 தொழிற்பாட்டு அபாயம் 9
2.7 சுற்றாடல் பிரச்சினைகள் 9

3. தொழிற்பாட்டு நடவடிக்கை அறிக்கை

வீடமைப்பு அபிவிருத்தி

3.1 2016 ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 12
செமட்ட செவண விசிறி வீடமைப்புத் திட்டம் 12
செமட்ட செவண மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம் 12
சம்பத் செவண நிகழ்ச்சித்திட்டம் - செவண விசிறி வீடமைப்புத்திட்டம். ... 13
செமட்ட செவண எழுச்சிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் 14
பூச்சுவேலை நிகழ்ச்சித்திட்டம் 14
செவண உதவி நிகழ்ச்சித்திட்டம் 14
அனுசரணை நிறுவன நன்கொடை நிதியத்திலிருந்து செவன உதவி மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம் 15
வெலி ஓயா நிலைபெறுதகு ஒருங்கிணைந்த வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் 15
சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மிகவும் வறிய குடும்பங்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டம் 16
3.2 ஆதன முகாமைத்துவம் 18
3.3 பொறியியல் சேவை மற்றும் நிர்மாணம் 19
அரச, தனியார் ஒருங்கிணைந்த அபிவிருத்தி (கருத்திட்டங்கள்) 22
ஏனைய கருத்திட்டங்கள் 22
துரித நடுத்தர வகுப்பு வீடமைப்பு அபிவிருத்தி 22

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கருத்திட்டங்கள் ... 23
3.4 மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப்...பிரிவு 23
3.4.1 மனித வள முகாமைத்துவப் பிரிவு 23
3.4.2 நிர்வாகப் பிரிவு 23
2016 ஆம் ஆண்டுக்கான நிர்வாகப் பிரிவின் செயலாற்றங்கள் 24
3.4.3 ஒழுக்காற்றுப் பிரிவு 24
3.4.4 போக்குவரத்துப் பிரிவு 24
2016 ஆம் ஆண்டில் போக்குவரத்துப் பிரிவின் இலக்குகள் 24
3.4.5 பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு 25
3.4.6 பணியாளர் வீடமைப்புக் கடன் பிரிவு 26
3.4.7 பாதுகாப்புப் பிரிவு 26
அடைந்த இலக்குகள் 26
பாதுகாப்பு அலுவலர்களால் தலைமை 26
அலுவலகம் .'. மாவட்ட அலுவலக... 26
கட்டிடத்தொகுதி நீங்கலாக பாதுகாப்புச் சேவை 26
வழங்கப்பட்ட நிலையங்கள்: 26
3.4.8 செவண ஆய்வு நிலையம் 26
3.4.9 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சவையின் வெப்தளம்...மற்றும் சமூக. 27
ஊடகங்களைத் தொழிற்படுத்தும் மற்றும் கணனிப் பிரிவு 27
3.4.10 சுவடிகள் கூடம் மற்றும் நூல் கட்டும் பிரிவு 27
3.5 சட்டப்பிரிவு 28
3.5.1 உறுதிகளை வழங்குதல் 28
3.6 திட்டமிடல் மற்றும் முன்னேற்றப் பிரிவு 29

4. அறவீட்டுப் பிரிவு

4.1 அறவீட்டுப் பிரிவு 31
4.1.1 2016ஆம் ஆண்டில் செயற்பாடு 31
4.1.2 2016ஆம் ஆண்டில் அறவீட்டை 31
அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 31
4.2 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 35
4.3 தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு 35
4.3.1 தகவல் மற்றும் பிரசார அலகு 35
4.3.2 செவண ஊடக பிரிவு 36
4.3.3 அச்சக அலகு 38
4.4 தகவல் தொழில்நுட்பப் பிரிவு 38
4.5 வரையறுக்கப்பட்ட ஓசன் வியூ டிவலப்மென்ற் .தனியார் கம்பனி 39
4.5.1 அறிமுகம் 39
4.5.2 நோக்கு 40
4.5.3 பணி 40
4.5.4 குறிக்கோள்கள் 40
4.5.5 வரையருக்கப்பட்ட ஓசன்விவ் டிவலொப்மன்ற் கம்பனியின் பணிப்பாளர்.. சபை ... 40
4.5.6 வரையறுக்கப்பட்ட ஓசன் விவ் டிவலொப்மன்ற் கம்பனியின் பணியாளர்கள் ... 40
4.5.7 முகாமைத்துவத்தின் முன்னேற்ற மீளாய்வு 40
4.5.8 2017 ஆம் ஆண்டுக்கான எதிர்கால திட்டங்கள் 40

5. நிதிக் கூற்றுக்கள்

5.1 நிதியியல் நிலமை பற்றிய கூற்று 42
5.2 நிதி செயற்பாடுகள் தொடர்பான கூற்றுக்கள்.. 43
5.3 கணக்கீட்டுக் கொள்கைகள் 44
5.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக் கள் 51

6. மாவட்ட அலுவலகங்கள் பற்றிய விபரங்கள்

6.1 மாவட்ட அலுவலகங்களின் அமைவிடம் 78
6.2 மாவட்ட அலுவலகங்களின் பெயரும் முகவரியும 79

7. கணக்காய்வாளரின் அறிக்கை **80**

அட்டவனை

Page

1. பொது

2. கூட்டிணைக்கப்பட்ட நிர்வாகம்

2.1 பதவிணியின் வகுதி 11

2.2 செமட்ட செவண விசிறி வீடமைப்புத் திட்டம் - 2016 11

3. தொழிற்பாட்டு நடவடிக்கை அறிக்கை

3.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 17

3.2 2016 ம் ஆண்டிற்குள் விற்பணை செய்யப்பட்ட வீடுகள் 18

3.3 2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கருத்திட்டங்கள் நகமு புரவர 2013 தொடரும் நிகழ்ச்சித்திட்டங்கள் 19

3.4 நகமு புரவர 2014 தொடரும் நிகழ்ச்சித்திட்டங்கள் (பாரிய அளவிலான கருத்திட்டங்கள்). 20

3.5 நகமு புரவர 2014 தொடரும் நிகழ்ச்சித்திட்டங்கள் (சிறிய அளவிலான கருத்திட்டங்கள்). 20

3.6 நகமு புரவர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2016 21

3.7 ஏனைய கருத்திட்டங்கள் 22

3.8 அனுமதித்த பணியாளர் வீடமைப்புக் கடன் 26

3.9 பணியாளர் வீடமைப்புக் கடன் அனுமதி யும் , ..கொடுப்பனவும். 26

3.10 குத்தகை உறுதி வழங்குதல் 28

3.11 தலைமை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வழக்குகள் 29

3.12 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை செமட்ட செவண வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அபிவிருத்தி வேலைத்திட்டம்..2016 29

4. அறவீட்டுப் பிரிவு

4.1 இலக்கை அடைதல் 31

4.2 வீடுகள் மற்றும் கடைகளுக்கான தவணைக்கட்டணம் மற்றும் கூலிகள் அறவீட்டுச் செயற்பாடு - 2016 32

4.3 வீட்டுக்கடன் மற்றும் நகர,கிராமியவாடகை - 2016 33

4.4 செவண ஊடக சேவை 37

வரைபு

2. கூட்டிணைக்கப்பட்ட நிர்வாகம்

2.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிறுவண...கட்டமைப்பு 10

4. அறவீட்டுப் பிரிவு

4.1 கடன் அறவீடு 2001-2016 34

4.2 2016 ஆம் ஆண்டிற்கான இலக்கு 38



கௌரவ தலைவரின் கூற்று

இலங்கையின் மக்கள் சமூகத்தின் அனைத்து பிரசைகளுக்கும் வீடொன்றின் உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு சிறந்த விதத்தில் திட்டமிடப்பட்ட, அனைவருக்கும் இல்லம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கடமைப் பொறுப்பை முறைசார்ந்த விதத்தில் நிறைவேற்றுவதற்கு பங்களிப்புச் செய்த ஒரு ஆண்டாக 2016 ஆம் ஆண்டைக் குறிப்பிட முடியும். இவ்வாண்டுக்காக ரூபா 7,000 மில்லியனுக்கு அதிகமான திறைசேரி நிதி முதலீடு மேற்கொள்ளப்பட்டதோடு.

அதில் இணைந்துகொண்ட வெளித் தரப்பினரின் உதவி மற்றும் பங்களிப்பின் ஊடாக வீடு பெறுனர்கள் 125,000 க்கு அதிகமான தொகையினரின் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்வதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் இயலுமாயிருந்தது. நாடளாவிய ரீதியில் புதிய மாதிரிக் கிராமங்களை நிர்மாணிக்கும் செயற்பாடு மிகவும் வெற்றிகரமாக 2016 ஆம் ஆண்டினுள் மக்கள்மயப்படுத்தப்பட்டதோடு, வீடுகளைத் திருத்துதல் மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட சாந்திடல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மாத்திரம் நன்மைகளைப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 75,000 ஆகும். விசிறி வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டம், சம்பத் செவன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், செவன உதவி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், வெலிஓயா நிலைபேண்தகு ஒருங்கிணைந்த வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் ஊடாக முழுமொத்த சமூகத்தினதும் வீடமைப்புத் தேவைப்பாட்டில் குறிப்பிடத்தக்க தொகையினருக்கு பங்களிப்புச் செய்வதற்கும், 2016 ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு இயலுமாயிருந்தது.

அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்பின் கீழ் நடுத்தர வருமானம் பெறுவோரின் வீடமைப்புத் தேவைகளுக்கும் நிலைபேறான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு புதிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துதலும் 2016 ஆம் ஆண்டினுள் நடைபெற்றது.இவற்றுக்கு மேலதிகமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடுகளின் உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு விசேட கவனம் செலுத்தப்பட்ட ஒரு காலகட்டமாக 2016 ஆம் ஆண்டைக் குறிப்பிட முடியும். இதன்படி 2016 ஆம் ஆண்டில் மாத்திரம் ஏறத்தாழ 5,000 குடும்பங்களுக்கு உரிமை மற்றும் குத்தகை உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு இயலுமாயிருந்தது.

வீடமைப்பு, நிர்மாணிப்பு அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களிடமிருந்து கிடைத்த மிக முன்மாதிரியானதும், பயனுறுதியானதுமான தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலும், வீடமைப்பு, நிர்மாணிப்பு பிரதி அமைச்சர் கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க அவர்களிடமிருந்து கிடைத்த அனுசரனை மற்றும் பங்களிப்பும், வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளரிடமிருந்து எப்போதும் கிடைத்த வழிகாட்டலும், 2016 ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வெற்றிக்கு காரணமாயமைந்ததோடு, இவ்வதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களிடமிருந்து கிடைத்த குறைவற்ற ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்புடன் பொதுமுகாமையாளர் முதற்கொண்ட உயர் முகாமைத்துவம் மற்றும் இந்த அனைத்து செயற்பாடுகளினதும் முதன்மையான செயற்பாட்டாளர்களான மாவட்ட முகாமைத்துவத்துடன் முழுமொத்த பணியாளர் குழாமும் 2016 ஆம் ஆண்டின் வீடமைப்பாக்கத்தின் அனைத்து வெற்றிகளினதும் உரிமையாளர்களாகும் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

லக்விஜய சாகர பலன்சூரிய
தலைவர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை



பொது முகாமையாளரின் கூற்று

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் 2016 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு குறிப்பொன்று எழுதுவதற்குக் கிடைத்தமை பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். 2016 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை வெளியிடப்படுவது 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி மூலோபாயங்களின் பெறுபேறுகளை உறுதிப்படுத்துகின்ற வகையிலாகும். முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகின்றபோது தேசிய வீடமைப்பு அதிகாரசபை சிறப்பியல்பான பல வெற்றிகளை அடையப் பெற்ற ஆண்டாக மீளாய்வுக்குட்பட்ட ஆண்டைக் குறிப்பிடலாம்.

வீடமைப்பு அபிவிருத்தி

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வசதியேற்பாட்டாளர் என்ற வகையில் பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறையின் கீழ் 125,582 குடும்ப அலகுகளுக்கு வீடமைப்பு அபிவிருத்தியின் பொருட்டு மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் பங்களிப்புச் செய்தது. இதன்படி பௌதீக செயலாற்றுகை 100% வீதத்தையும் நிதிசார் செயலாற்றுகை 90% வீதத்தையும் அடையப் பெற்றுள்ளது. நடுத்தர வகுப்பு சமுதாயத்தினருக்காக சலுகை விலையில் வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு தனியார் துறையுடன் ஒன்றிணைந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. நாட்டில் நிலவுகின்ற வீடமைப்புப் பற்றாக்குறைக்கான தீர்வாக நகரங்களை மிக நெருங்கியுள்ள பிரதேசங்களில் மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. ஹோமாகம, அதுருகிரிய, பாணந்துறை மற்றும் ராகம ஆகிய பிரதேசங்களில் 04 வீடமைப்பு கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

வீடமைப்பு அபிவிருத்தி செயற்பாட்டுக்கு சமாந்திரமாக நலன்பெறும் குடும்பங்களின் சொத்து உரிமையை உறுதி செய்யும் பொருட்டு, அறுதி உறுதிகளையும் குத்தக உறுதிகளையும் வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றும் அமுல்படுத்தப்பட்டது. அதேபோன்று பல ஆண்டுகளாக புதுப்பிக்கப்படாதிருந்த மாடிவீட்டுத் தொகுதிகளில் பொது வசதிகளை மேம்படுத்தலும் இவ்வாண்டினுள் அமுல்படுத்தப்பட்ட மேலுமொரு நிகழ்ச்சித்திட்டமாகும். ஆண்டினுள் ஒட்டுமொத்த வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் செலவு ரூபா 6,573.019 மில்லியனாகும்.

நிதி நிலைமை

ஆண்டினுள் மூலதன ஒதுக்கம் ரூபா 5.43 பில்லியன் அதிகரித்துள்ளதோடு, நடைமுறையல்லாத சொத்துக்களின் அளவு ரூபா 3.02 பில்லியனால் அதிகரித்துள்ளது. நீண்டகால கடன் தொகை ரூபா 1.22 பில்லியனால் குறைவடைந்துள்ளதோடு, நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 309.0 மில்லியனால் குறைவடைந்துள்ளது. செயற்படு மூலதனம் 20.5% வீதம் வரை அதிகரித்துள்ளது. இதன்படி ஆண்டினுள் நிதியியல் உறுதிப்பாட்டை அடைந்துகொள்வதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் இயலுமாயிருந்தது.

தொழிற்பாடுகளின் பெறுபேறுகள்

ஆண்டினுள் அதிகாரசபை பெற்ற ஒட்டுமொத்த வருமானம் ரூபா 2.740 பில்லியனிலிருந்து ரூபா 4.070 பில்லியன் வரை வளர்ச்சியடைந்துள்ளது. செலவின் ஒப்பீட்டளவிலான அதிகரிப்பு ரூபா 3.498 பில்லியனில் இருந்து ரூபா 4.467 பில்லியன் ஆகும். ஆண்டினுள் பெற்ற தேறிய இலாபம் ரூபா 240.302 மில்லியனாகும். இது அதிகாரசபை பெற்ற சிறப்பியல்பானதொரு வெற்றியாகும் என்பதோடு, எதிர்வரும் ஆண்டினுள்ளும் இந்தப் போக்கை பேணி வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகையை உயர் மட்டத்தில் பேணிவந்து பல வெற்றிகளை அடையப்பெறுவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அனைத்து ஊழியர்களையும் பாராட்டுவதற்கு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறேன்.

பொறியியலாளர் எம்.எஸ். வீரசிங்க,
பொதுமுகாமையாளர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

1

பொது

1.1 அறிமுகம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 1979ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சட்டத்தின் மூலம் இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தாபிக்கப்பட்டது.

இந்த அதிகார சபை அதன் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்துக்கு மேலதிகமாக 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 02 நகர அலுவலகங்கள் மூலம் நாடு முழுவதும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

எமது நோக்கு

இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளைக் கொண்ட பாதுகாப்பான வீடொன்றை உரித்தாக்கிக் கொடுத்தல்.

எமது பணி

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இலங்கை மக்களின், விசேடமாக வீடொன்றை உரிமையாக்கிக் கொள்வதற்கு வசதிகள் அற்ற குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு வீடமைப்புத் தேவையை நிறைவேற்றுவதற்காக தேசிய ரீதியில் ஊக்கமளித்தல், வசதிகளை அளித்தல், ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல், ஆகியவற்றின் மூலம் அவர்களின் சமூக நடவடிக்கைகளை மேம்படுத்துதல் பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

எமது நோக்கங்கள்

1979ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் எமது நோக்கங்கள் பின்வருமாறு:

- தொடர்மாடி வீடுகள், வேறு வதிவிடங்கள் அல்லது கட்டிடங்களை நிர்மாணிக்கும்போது அவற்றில் நேரடியாக ஈடுபடுதல்.
- வதிவிட தட்டுப்பாட்டைக் குறைப்பதற்காக வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான திட்டமிடல்.
- சேரி மற்றும் குடிசைகளைக் கொண்ட பிரதேசங்களில் அந்தச் சேரிகளையும் குடிசைகளையும் அகற்றி அந்தப் பிரதேசங்களை மீள்அபிவிருத்தி செய்வதற்கு திட்டங்களைத் தயாரித்தல்.
- வீடமைப்பு அபிவிருத்திக்கு ஆர்வமூட்டல்.
- அதிகார சபையின் நோக்கங்களுள் ஏதேனும் ஒன்றை செயற்படுத்துவதற்காக காணியை அபிவிருத்தி செய்தல் அல்லது மீள் அபிவிருத்தி செய்தல்.
- வீடமைப்பு நோக்கத்திற்காக எவருக்கேனும் காணியை வழங்குல்.
- அதிகார சபையின் நோக்கங்களில் ஏதேனும் ஒன்றுடன் ஒத்துப்போகக்கூடிய ஒரு நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவருக்கு நிதி அல்லது வேறு வசதிகளை வழங்குதல்.
- வீடமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்பான எல்லா பிரிவுகளினதும் நடவடிக்கைகளைச் செயற்படுத்தல், விருத்தி செய்தல் மற்றும் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்.
- மேலே சொல்லப்பட்ட நோக்கங்களில் குறிப்பிட்ட அளவினை அல்லது அனைத்தையும் நிறைவேற்றுவதற்காக அவசியமானவாறு அல்லது பொருத்தமானவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

குறிக்கோள்

- வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வீட்டு நிர்மாணத்திற்கான வசதிகளை வழங்குதல்.
- வறிய குடும்பங்களுக்கு வீட்டு நிர்மாணத்திற்கான உதவி வழங்குதல்.
- சேரிகளிலும் குடிசைகளிலும் வாழும் மக்களுக்கு வீட்டு வசதிகளை வழங்குவதற்காக நேரடியாகத் தொடர்புகொள்ளுதலும் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதலும்.
- நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்காக அவர்களுக்கு வசதியான விலையில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக சம்பந்தப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குதல்.
- வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கத்துக்காக நேரடியாக காணித்துண்டுகளை வழங்குதல் அல்லது வசதிகளை அளித்தல்.
- வீடொன்றில் வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாத்தல்.
- பழைய வீட்டுத் தொகுதிகளில் வதிவோருக்கு வாழ்வதற்குப் பொருத்தமான சிறந்த சுற்றாடலை உறுதிப்படுத்தல்.
- நகரங்களில் வாழும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குதல்
- வினைத்திறன்மிக்க, தரமான மற்றும் உறுதியான சேவையை வழங்குதல்.

1.2 கூட்டிணைத்தல் தகவல்கள்

1

பெயர்	:	தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை
சட்ட நிலைமை	:	1979ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சட்டம்
கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு	:	1979
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்	:	தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, செயலாளர் அலுவலகம், இல. 34, சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை கொழும்பு 02
தொலைபேசி இலக்கம்	:	2421606, 2431707, 2430410, 2431722, 2421748, 2380874
தொலைநகல்	:	2434892
மின்னஞ்சல்	:	chairman @nhda.lk
வெப்தளம்	:	www.nhda.lk
கணக்காய்வாளர்கள்	:	கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
ஆலோசனை சட்டத்தரணிகள்	:	சட்டத்துறைத் தலைமை அதிபதி, சட்டத்துறைத் தலைமை அதிபதி திணைக்களம், ஹல்ஸ்டோப், கொழும்பு 12
வங்கியாளர்கள்	:	இலங்கை வங்கி தாபனக் கிளை அச்சிலன் சதுக்கம் கொழும்பு 01
மக்கள் வங்கி	:	தலைமை அலுவலகக் கிளை சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை கொழும்பு 02

1.3 பணிப்பாளர் சபை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அமைச்சரவையினால் நியமிக்கப்படும் 6 உறுப்பினர்களையும் நிதி அமைச்சின் பிரதிநிதியாக நிறமிக்கப்படும் மற்றுமொரு உறுப்பினரையும் உள்ளடக்கியுள்ளதுடன் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களில் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார்.



தலைவர்

திரு. எல்.எஸ். பலன்சூரிய
இல.6, சுதர்சன வீதி,
ஹில்வீதி, தெஹிவளை



உபதலைவர்

திரு. கருணாரத்ன அத்துக்கோரள,
இல. 158, திக்ஹேனபுர,
மூனகம, ஹொரண



செயற்பாட்டுப் பணிப்பாளர்

திரு. கே.ஜி. விக்கிரம,
இல,55/ஏ,
உடுமுல்ல வீதி
பத்தரமுல்ல



உறுப்பினர்

திரு. சாந்த ஜயவர்த்தன
இல. 159/5" தர்மபால
மாவத்தை,பொல்லத்த பிட்டிய
தம்புள்ள வீதிஎ குருணாகலை



உபதலைவர்

திருமதி. சூலானந்தா
(மேலதிக செயலாளர்)
இல. 17/43, 5ஆவது ஒழுங்கை
புபுது மாவத்தை மத்தேகொட



உறுப்பினர்

திரு. எஸ்.எம். தயாரத்ன
இல. 18கூ3 ஏ,பலபொகுண
வீதி,கிருளப்பனை



உறுப்பினர்

அமல் விக்ரமதுங்க இல.
134F, நாகஹவத்த வீதி
தலுகம, களனி

உறுப்பினர்

சட்டத்தரணி திரு. பீ.எஸ்.
புஞ்சிஹேவா
"சாந்தி" பன்சலை வீதி முல்கிரிகல
(2015-05-22 முதல் 2016-12-22 வரை)

1.4 கூட்டிணைத்தல் முகாமைத்துவம்

1

திருமதி. எம். எஸ்.வீரசிங்க
பொது முகாமையாளர் / பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் சேவை, நிர்மாணம்)

திரு. எம்.எல்.பி. எதிரிசிங்க
பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்)
பதில் கடமை: பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் மற்றும் பிரசாரம்)
(2016.10.14 முதல்)

திரு. ஈ.ஏ.டீ.எஸ்.எதிரிசிங்க
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

திரு. டபிள்யூ.ஏ.டீ. சரத் குமார
பிரதிப் பொது முகாமையாளர் (ஆதன முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல்)

திரு. டபிள்யூ. தனசந்திர
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல், முன்னேற்றம்)

திரு. கே.ஏ. ஜானக
பிரதிப் பொது முகாமையாளர் (வீடமைப்பு அபிவிருத்தி)

திரு. கே.டபிள்யூ.ஏ. தர்ம சிறி காரியவசம்
பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் மற்றும் பிரசாரம்)
(2016.10.13 வரை)

திருமதி. ஏ.கே. புஷ்பா ரோஹினி
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)

திரு. ஆர்.எம்.யூ. டபிள்யூ. ரத்நாயக்க
பிரதான உள்ளகக் கணக்காய்வு

சட்டத்தரணி தனுஷ்க மாலிந்த ஜயலத்
பணிப்பாளர் சபை செயலாளர்
(2016.11.20 வரை)

சட்டத்தரணி மனோரி ரீ. ஒலபொடுவ
பணிப்பாளர் சபை செயலாளர்
(2016.11.21 முதல்)

1.5 எமது பிரதான செயற்பாடுகள்

எமது பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. கடன் மற்றும் உதவி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

- குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக சலுகை அடிப்படையில் கடன் வசதிகளைப் வழங்குதல்.
- அரச மற்றும் தனியார் துறை மற்றும் நிலையான வருமானம் பெறும் குடும்பங்களுக்காக கடன் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக கடனுதவி வீடுகளை நிர்மாணித்தல்
- வறிய குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு உதவி வழங்கல்.
- மீள்குடியேற்றத் திட்டத்திற்காக கடன் மற்றும் உதவிகளை வழங்குதல்

2. அரச துறையும் தனியார் துறையும் கூட்டாக வீடமைப்பு நிர்மாணங்களை வளர்ச்சியடையச் செய்தல்

- பொருத்தமான காணிகளை அடையாளம் காணல்
- விருப்பமுள்ள தரப்பினர்களை அழைத்தல்
- பொருத்தமான அபிவிருத்தியாளர்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் முன்மொழிவுகளைப் பெறுதல்
- முன்மொழிவுகளை மதிப்பிட்டு அபிவிருத்தியாளர்களைத் தெரிவு செய்தல்
- கருத்திட்ட வரைபடங்களை உருவாக்குதல்
- புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடல்
- ஒருங்கிணைந்த தொடர்புகளை மேற்கொள்ளுதல்
- நடைமுறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் தரச்சான்றுப்படுத்தல்
- சந்தைப்படுத்தல் மற்றும் வீடுகளை விற்பனை செய்தல்
- முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல்

3. வீடமைப்பு நிர்மாணம் மற்றும் உதவிச் சேவைகளை வழங்குதல்

- வீடமைப்புத் தகுதியை ஆராய்தல்
- சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல் மற்றும் ஒழுங்கமைத்தல்
- சமுதாய அபிவிருத்தி அமைப்புகளை உருவாக்குதல்
- வீடமைப்பு நிர்மாணங்களுக்கு அவசியமான தொழில்நுட்பத்தை வழங்குதல்
- குறைந்த செலவிலான நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறைகளைப் பற்றிய தகவல்களைப் பரப்புதல்
- தேவைப்பாட்டின் அடிப்படையில் நிதி உதவிகளை வழங்குதல்
- நிர்மாணிப்புகளின் தரத்தை/இசைவாக்கத்தை சான்றுப்படுத்துவதற்காக மேற்பார்வை செய்தல்
- உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் / தொடர்பைப் பேணுதல்

4. **நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் (வீடமைப்புக் கருத்திட்டம்)**

- பொருத்தமான இடத்தை அடையாளம் காணல்
- நில அளவைப் பணிகளை மேற்கொள்ளல்
- நிதிசார் இயலுமை மட்டத்தைத் தீர்மானித்தல்
- திட்ட வரைபடங்களைத் தயாரித்தலும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்
- முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தைத் தாபித்தல்
- உரிமையை வழங்குதல்

5. நகமு புரவர (தொடர்மாடி வீட்டு புனரமைப்பு) நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

- பழைய வீடமைப்புத் திட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- தொடர்மாடி வீடுகளை புனரமைத்தல்
- தொடர்மாடி வீட்டுத் தொகுதிகளில் வசிக்கும் மக்களின் ஆன்மீக குறைநலன்களை மேம்படுத்தி, ஒரு அழகான குடியிருப்பாக மாற்றுவதற்காக, விளையாட்டு மைதானம், உடற்பயிற்சி நிலையங்கள், தோட்ட அலங்காரம் மற்றும் புத்தர்சிலை மண்டபங்களை புதிதாக நிர்மாணித்தல்.

6. காணித்துண்டுகளை வழங்குதல்

- பொருத்தமான காணியை அடையாளம் காணல்
- தகுதியை ஆராய்தல்
- காணித்துண்டு வரைபடங்களைத் தயாரித்தல்
- தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
- காணி பெறுநர்களை அடையாளம்காணலும் தெரிவுசெய்தலும்
- அவசியமாயின், கடன் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பை மேற்கொள்ளுதல்

1

- தெரிவுசெய்யப்பட்ட காணி பெறுனர்களுக்கு காணித்துண்டுகளை வழங்குதல்

7. கடன் அறவீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

- கடன் மற்றும் வாடகை வருமானத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- வருடாந்த இலக்கினை ஏற்படுத்தல், இலக்கினை அடைவதற்குத் தேவையானவழிகாட்டல்களை வழங்கல், அது தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- மாதாந்த முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றின் குறைபாடுகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்தல்
- அறவீட்டு முகர்வகள் மற்றும் அறவீட்டு அலுவலர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- வருமான ஏற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் தரப்பட்டுள்ள பங்களிப்பு மதிப்பீட்டுக்கான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

8. வீடமைப்பு தொடர்பான மதியுரைச் சேவைகள்

- மாவட்ட வீடமைப்பு மதியுரைச் சேவை நிலையங்களைத் தாபித்தல்.
- தகைமை அறிக்கைகளைத் தயாரித்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் திட்டவரைபடங்களை வழங்குதல்.
- அளவு/பொருட்கள் பட்டியல்/செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- திட்டவரைபடங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுதல்.
- நிர்மாணங்களின் மேற்பார்வை மற்றும் தரச் சான்றுப்படுத்தல்.
- நிர்மாண தரவுத் தளமொன்றைப் பேணிவருதல்.

9. குறைந்த செலவிலான நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறைகளைப் பிரபல்யப்படுத்தல்

- ஏற்புடைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருதல் மற்றும்
- தகவல் பொருட்களின் மாதிரிகள் ஆகியவற்றை சேகரித்தல்.
- மதியுரை நிலையங்களின் மூலம் புதிய தொழில்நுட்ப முறைகளையும் பொருட்களையும்அறிமுகப்படுத்தல்.

10. வீடமைப்புத் திட்டங்களின் பொதுப் பிரதேசங்கள், அதன் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மாகாண மேலாண்மைக்கு ஒப்படைத்தல்

- பொதுப் பிரதேசங்கள் /திறந்த இடங்களின் எல்லைகளை அடையாளமிடல்.
- நில அளவையாளர் வரைபடங்களைத் தயாரித்தல்.
- மாகாண மேலாண்மையிலிருந்து இணக்கப்பாட்டைப் பெறுதல்.
- உறுதியொன்றின் மூலம் ஆதனங்களை ஒப்படைத்தல்.
- வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவித்தல்.

11. திறன் வளர்ச்சிக்கான பயிற்சி

- தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகளுடன் கலந்துரையாடி பயிற்சி அமர்வுகளை ஒழுங்குசெய்தல்.
- தொழில் பயிற்சி வாய்ப்புகளை அமைத்துக்கொடுத்தல்.
- அடிப்படை உபகரண உதவிகளை வழங்குதல்.
- செயற்பாட்டைப் பரிசோதித்தல்.
- அனுகூலமான தொழில்களின் பொருட்டு உதவியளிப்பதற்காக தரவுத் தளமொன்றைப் பேணுதல்
- திறன்களைக் கொண்ட ஆட்களின் தகவல்கள் அடங்கிய பெயர்ப்பட்டியலொன்றைப் பேணுதல்

12. வீட்டுக் கையிருப்புகள் தொடர்பிலான தரவுகளைப் பேணுதல்

- கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடனான ஒருங்கிணைப்புமற்றும் தரவுகளைச் சேகரித்தல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மதியுரை நிலையங்களுடனானஇணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்.
- மாகாண மேலாண்மைகளுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்
- மாவட்ட வீடமைப்புக் குழுக்களுக்கு தரவுகளைச் சமர்ப்பித்தல்.
- குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை நிரல்படுத்தல்.
- தரவுகளை அரை ஆண்டு ரீதியில் தரவுத் தளத்திற்குச் சமர்ப்பித்தல்.
- எதிர்காலத் திட்டமிடல்களின் பொருட்டு தரவுகளைப் பயன்படுத்தல்

2

கூட்டிணைக்கப்பட்ட நிர்வாகம்

நிறுவன ரீதியிலான நிர்வாகத்தின் உயர் மட்டம் வரை செல்வதற்கான தீவிர இடையறா அர்ப்பணிப்பை நாம் கொண்டுள்ளோம். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு ஆகிய நிறுவனங்களின் மூலம் முன்மொழியப்பட்ட மிகப் பொருத்தமான நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு எப்போதும் முயற்சி மேற்கொள்ளப்படுவதுடன் எமது வகைப்படுத்தலுக்குரிய அமைச்சினால் வழங்கப்படுகின்ற அளவீடுகளுக்கு இணங்க செயற்பட்டு வருகின்றோம்.

2.1 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபை ஒவ்வொரு மாதமும் கூடுகின்றது. வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்பீட்டளவிலான முன்னேற்றம் ஒவ்வொரு மாதமும் அதன் மூலம் மீளாய்வு செய்யப்படுகின்றது. மாற்றங்களை அடையாளம்கண்டு கொள்கைகளை மாற்றுவதற்குப் பொருத்தமான தீர்வுகள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில் 18 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

பொது முகாமையாளரையும் 03 பணிப்பாளர்களையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கொண்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் பின்வரும் உத்தியோகத்தர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களாகச் சேவையாற்றினர்.

1. திரு. எஸ். தயாரத்ன
   (பணிப்பாளர், நிதி அமைச்சு) தலைவர்
2. திரு. கே. அத்துகோரள
   (உப-தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்)
3. சட்டத்தரணி திரு ஜி.எஸ். புஞ்சிஹேவா
   (பணிப்பாளர் சபை உறுப்பினர்)
4. திரு. ஆர்.எஸ். சமரக்கொடி
   (பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - வீடமைப்பு அமைச்சு) - உறுப்பினர்
5. திரு. எஸ் சஞ்ஜீவ,
   (கணக்காய்வு அதிகாரி - அரச கணக்காய்வு) - உறுப்பினர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மூலம் கணக்கீட்டு மற்றும் நிதி முகாமைத்துவமுறைமை சிறப்பாக நடைபெறுவதை உறுதிசெய்வதோடு கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடைய சட்ட விதிகளுக்கு இணங்க உள்ளக நிர்வாகத்தின் செயற்பாடு மீளாய்வு செய்யப்படும்.

2016 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 06 கூட்டங்களை நடத்தியது.

2.3 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

கௌரவ அமைச்சரின் தலைமையில் தவிசாளர், உப தவிசாளர், செயற்பாட்டுப் பணிப்பாளர், பொது முகாமையாளர், அனைத்துப் பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் மாவட்ட முகாமையாளர்களின் பங்கேற்புடன் மாதாந்தம் நிறுவனத்தினால் அலுவல்கள் தொடர்பாக முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

2.4 உள்ளக நிர்வாகம்

தேசிய அபிவிருத்தி அதிகார சபை தனது நிறுவனத்தின் சொத்துகளின் பாதுகாப்பு, மற்றும் உச்சப் பயன்பாட்டை உறுதிசெய்யும் நோக்கத்துடன் உள்ளக நிர்வாகக் கொள்கைகள் மற்றும் ஒரு சில மதியுரைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதேபோன்று உபாயத்திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தம் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

இதற்கு சமனான விதத்தில் பணிப்பாளர் சபை சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட மாதாந்த அறிக்கையிடல் முறையின் ஊடாக உள்ளக நிர்வாகத்தை உறுதிசெய்வதோடு சொத்துகள் மற்றும் பொறுப்புகளுக்கு இடையே சமநிலையைப் பேவதற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்கின்றது.

வாராந்தம் தவிசாளரின் தலைமையில் முகாமைத்துவக் குழுக் கூட்மொன்று நடத்தப்பதுவதுடன் அனைத்துப்

பிரதிப் பொது முகாமையாளர் பிரிவுகளினதும் அலுவல்கள் தொடர்பாக கலந்துடையாடப்படும். விலைக் குழுக்கள், திணைக்களக் கொள்வனவு வழங்கல் குழுக்கள், ஆதன துணைக் குழுக்கள், மற்றும் மேன்முறையீட்டுக் குழுக்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளது.

2

2.5 நிறைவேற்று முகாமைத்துவம்

தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் தலைமைத்துவத்தைப் பிரதிப் பொது முகாமையாளர் ஒருவர் மேற்கொள்வதுடன் 25 மாவட்ட அலுவலகங்களுடன் 02 நகர அலுவலகங்களின் பொறுப்பு சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர் / மாவட்ட முகாமையாளரின் பொறுப்பில் உள்ளது. பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர்கள் / மாவட்ட முகாமையாளர்கள் பொது முகாமையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும் என்பதுடன் பிரதம நிறைவேற்று அலுவலரான பொது முகாமையாளர் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

2.6 இடர் முகாமைத்துவம்

பெருந்தொகையான சேவை வழங்குனர்களுக்கு அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடமைப்பு வசதிகளை வழங்குகின்றதும் நாடு முழுவதிலும் பரந்துள்ள 25 பிரதேச அலுவலகங்களைக் கொண்டுள்ளதுமான இலங்கையின் ஒரேயொரு அரச நிறுவனமாகிய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதன் பல்வேறு பங்குதாரர்களின் தேவைகளைப் பேணும் நோக்குடன் நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பல இடர்நேர்வுகளை எதிர்நோக்குவதோடு அதனை முன்கூட்டியே முகாமைத்துவம் செய்தும் வருகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து தொழில்சார் குறிக்கோள்களையும்நிறைவேற்றிக்கொள்வதற்காக, அதன் கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கொள்கைகள், வழிமுறைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தை உறுதிசெய்வதற்காக தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புதல் பணிப்பாளர் சபையின் மூலம்மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின்அனைத்து தொழில்சார் நோக்கங்களும் நிறைவேற்றப்படுகின்றன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இடர்நேர்வுகளுக்கு உள்ளாதல் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் மற்றும் கட்டுப்படுத்தக் கூடிய முறைமைகளின் பலவீனங்களை இனங்காண்பதற்காக இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடு அதிகார சபையின் கணக்காய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்படுகின்றது. வினைத்திறன் மற்றும் கட்டுப்பாட்டு நிலைமைகளின் போதுமாந்தன்மை தொடர்பிலான சுயாதீனமான கருத்துகளை காலக்கிரமத்துடன் முகாமைத்துவத்திற்கு அறிவித்தல் கணக்காய்வுப் பிரிவின் மூலம் நடைபெறுகின்றது.

2.6.1 திரவத்தன்மை அபாயம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உடன்படிக்கைகள் தொடர்பிலான கடப்பாடுகளைஉரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு இயலாமற்போகின்றபோது இந்த இடர்நேர்வுக்குஉள்ளாகின்றது. அவற்றின் காலம் கடந்துள்ள சந்தர்ப்பங்களில் நிதிசார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக நிதியங்கள் இருத்தலும் தேவைகள் எழுகின்றபோது அவற்றின் பயன்களை வழங்குவதற்குத் தேவையான நிதிசார் ஏற்பாடுகள் உள்ளதென்பதை உறுதி செய்தலும் இதில் உள்ளடங்குகின்றது.

திட்டமிடலுக்கான வழிகாட்டல், ஒழுங்குமுறையான தேவைகளின்படி செயலாற்றுதல்,உடன்படிக்கைகளின் கடப்பாடுகள் மற்றும் வளர்ச்சி எதிர்பார்ப்புகளைஎதிர்நோக்குவதற்குத் தேவையான போதியளவு திரவத்தன்மை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குஉரித்தாயுள்ளதென்பதை உறுதிசெய்தல் ஆகிய முதன்மையான விடயங்கள் பணிப்பாளர் சபைக்கும்கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் அங்கத்தவர்களுக்கும் முகாமைத்துவத்தின் பொருட்டுஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட முகாமைத்துவம் அதற்குரிய முதன்மையான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டு,

- பணம் ஈட்டுவதுடன் தொடர்புடைய மாற்று வழிமுறைகளை போதியளவு உறுதி செய்தல்.
- அப்போதைக்குள்ள கடன்கள், முதலீடுகள் மற்றும் பணம் ஈட்டுகின்ற வழிமுறைகளைகாலக்கிரமத்தின்படி மீண்டும் ஆராய்தல்.
- அப்போதைக்குள்ள விலைகளை மீளாய்வு செய்கின்ற அதேவேளை, போட்டியாளர்களின்விலைகளைப் பற்றிய பகுப்பாய்வொன்றை மேற்கொள்ளல்.
- கூட்டிணைத்தல் அளவீடுகளுக்கு இணங்க திரவத்தன்மை வீதங்களுக்கான வழிகாட்டல்கள்

வழங்கல்கள், உள்ளக ரீதியில் ஈட்டப்படுகின்ற நிதியங்கள் மற்றும் பணமாக மாற்றக்கூடியகுறுகியகால முதலீடுகளை நிர்வகிப்பதன் ஊடாக திரவத்தன்மையைப் பேணிவருவதைநாளாந்தம்மேற்கொள்கின்றது.

2.6.2 சந்தை அபாயம்

விலைக் கூருணர்வுடைய சொத்துகள் மற்றும் பொறுப்புகளைப் பேணிவருகின்றபோது எழுகின்றநட்டங்கள் தொடர்பில் இந்த இடர்நேர்வு

உருவாகின்றதோடு, பிரதானமாக வட்டி வீதங்களின்மாற்றங்கள் மற்றும் காலத்தின் போக்கில் கட்டடப் பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்றஅசைவுகளின் காரணமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் இது தாக்கத்தைஏற்படுத்துகின்றது.

வீடு தேவைப்படுகின்ற அனைத்து ஆட்களுக்கும் வீடொன்றைச் சொந்தமாக்கிக் கொள்வதற்குஅரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பணம் போதியதாக இல்லாத காரணத்தினால் சந்தை இடர்நேர்வைஎதிர்நோக்குவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குநேரிடுகின்றது.

கூட்டிணைத்தல் முகாமைத்துவ நோக்கங்களை ஈட்டிக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்கின்றஏனைய பிரதானமான பங்குதாரர்களாகிய நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்தல் மற்றும் சேவைவழங்குனர்களின் பணத்திற்கு ஏற்ற விதத்திலான சேவைக்கான பெறுமதியை வழங்கி வீடமைப்புச் சந்தைக்கு விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்களை உச்சமட்டத்தில் கட்டுப்படுத்துதல் ஆகியவைகூட்டிணைப்புச் சபையின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

2.6.3 தொழிற்பாட்டு அபாயம்

வெளிவாரிப் போட்டி ரீதியிலான சக்திகளைஎதிர்நோக்குவதற்கு சிரமமாயுள்ள அல்லதுசெயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்துகின்ற உள்ளகப் பலவீனங்களின் காரணமாக போதியதாக இல்லாதஅல்லது உள்ளக செயற்பாடுகளின் பெறுபேறாக இந்த இடர்நேர்வு உருவாகின்றது.

நிறுவனத்தினுள் சிறந்த முறையிலும் ஒழுங்காகவும் நிர்வகிக்கப்படுகின்ற செயலூக்கம் மிக்கசுற்றாடலொன்றை வழங்கும் நோக்குடன் அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகள் மற்றும்விரிவான கொள்கைகளுடன் கூடிய முறைமையொன்று இடர்நேர்வுக் கட்டுப்பாட்டுக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுள் பேணிப்படுகின்றது.

பயனுறுதியான செயலூக்கம் மிக்க இடர்நேர்வு முகாமைத்துவத்திற்காக சில விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தகவல்களின் பாதுகாப்பைப் பேணிக்காத்து அனைத்து மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் பெறப்பட்ட காலக்கிரமமான தரவுகளின் திரட்டலை அறிக்கையிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.
- தகவல்களைப் பாதுகாக்கின்ற கொள்கைகள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்.
- வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- கடனை மீள அறவிடுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகள்

தொழிற்பாட்டு இடர்நேர்வை கட்டுப்படுத்தல் மத்திய முகாமைத்துவத்தின் முதன்மையானதொருபொறுப்பாகும். கட்டுப்படுத்தப்பட்ட சூழலின் தனித்துவத்தைப் பேணிவரும் பொருட்டு நிதி,கணக்காய்வு மற்றும் ஏனைய உதவிச் சேவைப் பிரிவுகளின் மூலம் பெரும் பணி ஆற்றப்படுகின்றது.

பெறுமதியான பல சொத்துகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச்சொந்தமாதல், தகுந்த உபாய வழிமுறைகளைப் பயன்படுத்துதல், தொடர்ச்சியானமீளாய்வுகள் மற்றும் பணியாட்டொகுதியினரின் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஊடாக போட்டிரீதியிலான சுற்றாடலினுள் வெற்றியடையலாம் என்பதை எதிர்பார்க்கக்கூடியதாயுள்ளது.

2.7 சுற்றாடல் பிரச்சினைகள்

கட்டிடங்களை நிர்மாணித்தல் சுற்றாடல் முறைமையினுள் பல விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இத்தாக்கத்தை கூட்டாட்சிக் கட்டடங்கள் மற்றும் வீடமைப்புத் திட்டங்களில் மிகத்தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. சுற்றாடல் பாதுகாப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளில் முக்கியமானதொரு அம்சமாகும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டக்கூடியதாக உள்ளது.


தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மக்களுக்கு பாதுகாப்பானதும் சிறந்ததுமானசுற்றாடலொன்றை வழங்குகின்ற அதேநேரம், குடிநீர், போதியளவு பிரவேசப் பாதைகள்,தொடர்ச்சியான மின்சார வழங்கல், மழை நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் முறைமைகள், திண்மக்கழிவுப் பொருட்களை அகற்றுதல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படுகின்றன.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையின் சட்ட விதிகளின் மூலம் கூட்டாட்சி ஆதனங்களில் வசிப்பவர்களுக்கு மிகச் சிறந்ததொரு சுற்றாடல் உறுதிப்படுத்தப்படுகின்றது.

2

2.1 வரைபு

தசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிறுவண கட்டமைப்பு



2.1 அட்டவனை
2016-12-31 திகதி பதவிணியின் வகுதி

தொ. இல.	சேவை மட்டம்	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள எண்ணிக்கை
01	சிரேஷ்ட முகாமைத்துவம்	115	88
02	மூன்றாம்நிலை முகாமைத்துவம்	157	301
03	இரண்டாம்நிலை முகாமைத்துவம்	899	1405
04	ஆரம்ப	205	349
	மொத்தம்	1376	2143

நிதி - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரபை

2.2 அட்டவனை
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை
2016 இல் இருந்தவாறு முன்னேற்றம்
செமட செவன வீடமைப்புத் திட்டம்

நிகழ்ச்சித்திட்டம்		நிகழ். ஆரம்பம்	அடைவு
1	**திறைசேறி நிதியம்**		
	1.1மாதிரிக் கிராமத் திட்டம்	4,641	1,079.172
	1.2விசிறி வீட்டுத்திட்டம்	34,619	3,563.450
	1.2.1 உதாகல கம்மான திட்டடம்	1,180	135.633
	1.2.2 விதவைகளுக்கான வீடமைப்புத் திட்டம்	158	11.445
	1.2.3 சிறுநீரக நோயாளிகளுக்கான வீடமைப்புத் திட்டம்	700	74.560
	1.3 பூச்சுவேலை	77,509	641.899
	1.4 வெலிஓயா விடே கருத்திட்டம்	1,084	310.845
2	**உள்ளக நிதியம்**		
	2.1 சம்பத் செவண திட்டடம்	3,729	271.506
3	**மானிய வீடமைப்புத் திட்டம்**		
	3.1 செவண மானிய வீட்டுத் திட்டம்	118	9.910
	3.2 செவண கிராமத் திட்டம்	896	23.815
4	**வேறு மானிய வெளி நிதி**	10	0.435
5	4.1 நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீட்டுத்திட்டம்	672	-
	உப மொத்தம்	**125,316**	**6,122.67**
5	**பழைய வீடமைப்புக் திட்ட புனர்நிர்மாணம்**		240.000
6	**தொடரும் வேலைத்திட்டம்**	266	190.726
	மொத்தம்	**125,582**	**6553.396**
7	உறுதிகள் வழங்குதல்		
	7.1 உரித்துறுதி		1851
	7.2 குத்தகை உறுதி		7599

	இலக்கு	**அடைவு**	
கடன் அறவீடு	7250,778	4121.206	57%
கடன் மற்றும் வாடகை			

3

தொழிற்பாட்டு நடவடிக்கை அறிக்கை

வீடமைப்பு அபிவிருத்தி

2016ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நாடு முழுவதும் பரந்து வாழும் வீடு மற்றும் காணி இல்லாத குடும்பங்களுக்காக நிலைபேறான வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் எல்லோருக்கும் செவண வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் வாழும் வீட்டுப் பிரச்சினையை எதிர்நோக்கும் குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்காக வீட்டு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 2016ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

1. செமட்ட செவண விசிறி வீடமைப்புத் திட்டம்
2. செமட்ட செவண மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம்
3. சம்பத் செவண நிகழ்ச்சித்திட்டம்
4. விதவைப் பெண்களுக்கான வீடமைப்புக் கடன் வழங்கல்
5. செமட்ட செவண உதாகல கம்மான நிகழ்ச்சித்திட்டம்
6. பூச்சு வேலை நிகழ்ச்சித்திட்டம்
7. செவண உதவி நிகழ்ச்சித்திட்டம்
8. அனுசரணை நிறுவன நன்கொடை நிதியத்திலிருந்து செவன உதவி மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம்
9. வெலிஓயா விஹேஷ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
10. சிறுநீரக நோயாளிகள் மற்றும் மிகவும் வறியோருக்கான வீடமைப்புத் திட்டம்

01. செமட்ட செவண விசிறி வீடமைப்புத் திட்டம்

நாடு முழுவதையும் உள்ளடக்கி மாவட்ட மட்டத்தில் பரந்தளவில் வீடுகளை நிர்மாணிப்பதை நோக்கமாகக் கொண்டு காணிகளைக் கொண்டுள்ள மக்களுக்கு புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்கும் தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துவதற்கும் இந்த வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் முக்கியமான நோக்கம் பயன்பெறுனர்களுக்கு வழங்கப்படும் கடனுக்கு மேலதிகமாக, பயன்பெறுனர்களின் பங்களிப்புடன் பெறுமதிமிக்க வீடுகளை நிர்மாணித்து வீட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதாகும். 2016ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 26000 ஆகும். திறைசேரியின் ஏற்பாடு ரூபா 3687.50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்காக பயனாளிகளுக்கு அதிகூடியது ரூபா 350,000.00 கடனும் வீட்டு நிர்மாணப் பணிகளுக்காக அதிகூடியது ரூபா 262,500.00 கடனும் வழங்கப்படும் அதேவேளை, வழங்கப்படும் கடன் தொகைக்கேற்ப 3.732% தொடக்கம் 6% வரையிலான வருடாந்த வட்டி வீச்சினுள் அதிகூடியது 10 வருடங்கள் கால எல்லைக்கு தவணைக்கட்டணமாக செலுத்தும் அடிப்படையில் மாதமொன்றுக்கு ரூபா 35,000.00 அல்லது அதற்குக் குறைவான வருமானம் ஈட்டும் பயனாளிகளுக்காக கடன் வழங்கப்படுகின்றது.

இதில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பயனாளிகளுக்கு வீட்டை நிர்மாணிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவியும் வழங்கப்படுவதுடன் பங்கேற்பு அபிவிருத்தி அடிப்படையில் பயனாளிகளின் பங்களிப்புடன் அவர்களின் வீட்டை நிர்மாணிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. 34,619 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,563.45 மில்லியன் கடன் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 17,715 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. எஞ்சிய ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்படாத வீடுகளை 2017ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் விதவைகள் மற்றும் பெண்களுக்காக 158 வீடுகள் அமைக்கவிருப்பது விசேடமாகும்.

02. செமட்ட செவண மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம்

நாடு முழுவதிலும் உள்ள வீடுகள் மற்றும் காணிகள் அற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக நிரந்தரமான வீடுகளை வழங்கும் நோக்கத்துடன்



செமடசெவன விசிறி வீடமைப்பு திட்டத்தின் கீழ் பயனாளிக் குடும்பங்களுக்கு உறுதி வழங்கள்.

இந்த மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தகுதியுடைய பயனாளிகளுக்கு காணித்துண்டொன்றை வழங்கி நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் புதிய வீடுகளை நிர்மாணித்து அடிப்படையான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட முழுமையான கிராமத்தை மக்களுக்கு வழங்குதல் இதன் பிரதான நோக்கமாகும்.

இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான வீடுகளை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான காணியைத் தெரிவு செய்து காணிக் கச்சேரி முறைமையில் தெரிவுசெய்யப்படும் பயனாளிக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்குதல் பிரதேச செயலாளரின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. தேசிய வீடமைப்பு அதிகார சபை பயனாளிக்கு வீட்டை நிர்மாணிப்பதற்கான கடனையும் அவசியான தொழில்நுட்ப உதவியையும் வழங்குவதுடன் பங்கேற்பு அபிவிருத்தியின் அடிப்படையில் பயன்பெறுனரின் பங்கேற்புடன் வீட்டை நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நிர்மாணிப்பதற்கு கருதிய வீடுகளின் எண்ணிக்கை 4500 ஆகும். இதற்கு திறைசேரியின் ஒதுக்கீடு ரூபா 1125 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

4641 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றுள் 259 வீடுகள் வருட இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. ரூபா 1079.172 மில்லியன் கடன் தொகை விடுவிக்கப்பட்டுள்ள அதேவேளை, எஞ்சிய ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்படாத வீடுகளை 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



அம்பாந்தோட்டை மாவட்ட சொபாசெத்கம மாதிரிக் கிராமத்தை திறந்து வைத்த வீடமைப்பு மற்றும் நிர்மானிப்புத்துறை அமைச்சர் அவர்களினால் பாடசாலை மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குகிரார்.



செமடசெவன மாதிரிக் கிராமத்தின் கீழ் சங்ஹிதிகம மாதிரிக் கிராமத்தை திறந்து வைத்த போது



கௌரவ வீடமைப்பு மற்றும் நிர்மானிப்புத்துறை அமைச்சர் அவர்களால் அம்பாறை மாவட்ட தயாபுர மாதிரிக் கிராமத்தை மக்கள் `பாவணைக்கு விடுவித்த

3

03. சம்பத் செவண நிகழ்ச்சித்திட்டம் - செவண விசிறி வீடமைப்புத்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முன்னைய வருடங்களில் நாடுமுழுவதும் வழங்கப்பட்டுள்ள வீட்டுக் கடன்களை அந்தந்தக் காலப்பகுதியில் திரட்டப்பட்ட நிதியிலிருந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கடன் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

செமட்ட செவண மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எவரேனும் பயனாளிக்கு வீட்டை நிர்மாணித்துக்கொள்வதற்கு அவசியமான மேலதிக ஏற்பாடாக வீட்டுக்கடன் வழங்குதல்.

செமட்ட செவண விசிறி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் எவரேனும் பயனாளிக்கு வீட்டை நிர்மாணிப்பதற்கு அவசியமான கடன் தொகையை வழங்குவதற்காக திறைசேரியின் ஒதுக்கீடு போதாத காரணத்தினால், இந்தத் திட்டத்தின் கீழ் வீட்டை நிர்மாணிப்பதற்கு கடன் வழங்குதல்.

2016ஆம் ஆண்டில் 3729 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டதுடன் அவற்றுள் 2145 வீடுகளின் நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது. இதற்காக உள்ளக ஏற்பாடு ரூபா 271.506 மில்லியன் செலவிடப்பட்டது. எஞ்சிய ஏற்பாடுகளைப் பயன்படுத்தி பூர்த்தியடையாத வீடுகளை 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- **சம்பத் செவண நிகழ்ச்சித்திட்டம் - விதவைகளுக்கான வீடமைப்புக் கடன் வழங்கல்**

2016ஆம் ஆண்டில் 44 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டதுடன் அவற்றுள் 25 வீடுகளின் நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது.

04. செமட்ட செவண உதாகல கம்மான (எழுச்சிக் கிராமம்) நிகழ்ச்சித்திட்டம்

நாடு முழுவதிலும் பரந்து வாழும் காணி ஒன்றை உரிமையாகக் கொண்டிருந்து அந்தக் காணியில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பூரமாண வீடாக நிர்மாணிப்பதற்கும் தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துவதற்கான தேவை உள்ள அத்துடன் புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கான தேவை உள்ள கிராமிய மக்களுக்காக ஒரே இடத்தில் அமைந்துள்ள கிராமம் ஒன்றை எழுச்சிக் கிராமமாக அபிவிருத்தி செய்தல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீட்டு நிர்மாணத்துக்காக பயனாளிகளுக்கு கடன் வழங்கப்படுகின்றது. இதன் கீழ் ஆறு மாவட்டங்களில் உதாகல கம்மான (எழுச்சிக் கிராமம்) நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து 1180 பயனாளிகளைத் தெரிவுசெய்து ரூபா 135.633 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ள அதேவேளை, இவற்றில் 207 வீடுகளின் நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது. எஞ்சிய ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி முடிவடையாத வீடுகளை 2017ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

05. பூச்சுவேலை நிகழ்ச்சித்திட்டம்

அதிமேதகு ஜனாதிபதியின் பதவியேற்பை முன்னிட்டு வருமானம் குறைந்த குடும்பங்களினால் நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் வெளிப்புறச் சுவர் அல்லது உட்புறச் சுவர் முழுமையாக பூர்த்திசெய்யப்படாத அல்லது பகுதியளவில் பூச்சுவேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள சுவர்களின் பூச்சுவேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு எல்லா மாவட்டங்களையும் எல்லா பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் விதத்தில் 3000 குடும்பங்கள் என்னும் அடிப்படையில் நாடு முழுவதிலும் 75000 குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் மூன்று கட்டங்களில் இந்த சீமெந்து உதவியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்காக திறைசேரி ஏற்பாடு ரூபா 641.899 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

06. செவண உதவி நிகழ்ச்சித்திட்டம்

வீட்டுக்கடன் தொகையைப் பெற்று மீண்டும் செலுத்துவதற்கு முடியாதபோதிலும் வீட்டை நிர்மாணித்தல் மிகவும் அவசியமாக உள்ள வசதியற்றவர்களாகக் காணப்படும் அல்லது நிரந்தர வருமான வழியின்றி விரக்தியுடன் வாழும் வதிவிடம் அற்ற மிகவும் வறிய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது. கௌரவ வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரின் வழிகாட்டலின் பிரகாரம் மாவட்ட மட்டத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நாளாந்தம் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாக அரசியல் தலைமைத்துவத்தினால் தெரிவிக்கப்படும் வீடற்ற நிர்க்கதியான குடும்பங்களுக்கும் மக்களின் வேண்டுகோள்களின் பிரகாரம் உதவி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பயனாளிகள் அடையாளம்காணப்படுகின்றனர். இதன் கீழ் சம்பந்தப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்கு அவசியமான செலவின மதிப்பீடு மாவட்ட முகாமைத்துவத்தின் விதப்புரையுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற அதேவேளை, அதன் பிரகாரம் பயனாளிக்கு வழங்கப்படும் உதவித் தொகை நிர்ணயிக்கப்படும். காணியில் வீட்டை நிர்மாணித்துக்கொள்வதற்கு அவசியமான கட்டிடப் பொருட்களைத் தயார் செய்து எவரேனும் பிற தரப்பினரின் பங்கேற்பைக் கொண்டுள்ள சம்பந்தப்பட்ட காணிக்கு உரிமையுள்ள குடும்பங்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படும்போது அதிக கவனம் செலுத்தப்படும்.

இதற்கு அவசியமான நிதியம் செவண லொத்தர் நிதியத்திலிருந்து பெறப்படும். இதன் கீழ் புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்கு அதிகூடிய நிதி 200000.00 ரூபாவும் வீட்டைப் புனரமைப்பதற்கு அதிகூடியது 100000.00 ரூபாவும் நிர்மாணத்திற்கேற்ப 04 கட்டங்களில் நிதி விடுவிக்கப்படும்.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் 118 பயனாளிக் குடும்பங்களுக்கு செவண நிதி உதவி வழங்கப்பட்டதுடன் இதற்காக ரூபா 9.910 மில்லியன் செலவிடப்பட்டது. இவற்றுள் 32 வீடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் பூர்த்தியடையாத வீடுகளை 2017ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

07. அனுசரணை நிறுவன நன்கொடை நிதியத்திலிருந்து செவண உதவி மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம்

வீடமைப்பு மற்றும் நிர்ணமாணத்துறை அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களின் வழிகாட்டலின் கீழ் நாடுமுழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தைப்பற்றிய நல்லெண்ணத்துடன் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுசரணை நன்கொடையாளர்கள் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக செவண நிதியத்துக்கு நிதிகளை அன்பளிப்புச் செய்தனர்.

இந்த அனுசரணை நிறுவன நன்கொடையாளர்களின் அன்பளிப்பு நிதியத்திலிருந்து செவண உதவி மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளை, மீளாய்வாண்டில் இந்த நிதியத்திலிருந்து 896 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 23.815 மில்லியன் செலவிடப்பட்டது. இவற்றுள் வருட இறுதியில் 27 வீடுகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் பூர்த்தியடையாத வீடுகளை 2017ஆம் ஆண்டில் மீதி ஒதுக்கீட்டு நிதியைப் பயன்படுத்தி முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

08. வெலி ஓயா நிலைபெறுதகு ஒருங்கிணைந்த வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்

வடக்கில் நிலவிய போர் சூழல் முடிவடைந்த பின்னர் நடைபெறும் சமூக, பொருளாதார வாழ்க்கைமுறையினுள் வாழ்வதற்குப் பொருத்தமான நிலைபெறுதகு வீடொன்றை நிர்மாணிப்பதற்கு உதவியை எதிர்பார்க்கும் முல்லைத்தீவு மாவட்ட வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரும்பாலான குடும்பங்கள் பொருத்தமான வீடுகள் இன்றி தற்காலிகக் கூடாரங்களிலும் இடம்பெயர் முகாம்களிலும் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் வாழ்கின்றனர். அவற்றுள் 1000 குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவியை வழங்கும் அடிப்படையில் 500 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருத்தமான பயனாளிகளைத் தெரிவுசெய்தல் மாவட்ட முகாமையாளர்(முல்லைத்தீவு), மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் வதிவிட வணிக முகாமையாளர், பிரதேச செயலாளர் (வெலிஓயா) ஆகியோரை உள்ளடக்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் முழுவதும் மாவட்ட செயலாளரின் (முல்லைத்தீவு) கண்காணிப்பின் கீழும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் உயர் முகாமைத்துவத்தின் கண்காணிப்பின் கீழும் மேற்கொள்ளப்படுகின்றது.

இங்கு புதிய வீட்டுக்காக 500,000.00 ரூபாவும் வீட்டின் புனரமைப்புக்காக 200,000.00 ரூபாவும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக திறைசேரி நிதியத்தினால்ரூபா 350 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் புதிய வீடுகள் 519 மற்றும் புனரமைக்கப்பட்ட வீடுகள் 565 ஆகியவற்றை உள்ளடக்கி 1084 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, இவற்றுள் 42 வீடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இவ்வாண்டில்,ரூபா 310.845 மில்லியன் வீடுகளை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டுள்ள அதேவேளை, செலவிடப்படாத எஞ்சிய ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பூர்த்தியடையாத வீடுகளை 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

9. சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மிகவும் வறிய குடும்பங்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டம்

9.1 சீறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள்

அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையின் கீழ் 2016.05.30ஆம் திகதி கூடிய சிறுநீரக நோய்த் தடுப்பு நடவடிக்கைச் செயலணியின் பணிப்பின் பிரகாரம் சிறுநீரக நோயாளிகள் மற்றும் மிகவும் வறுமையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குஅடிப்படை வசதிகளைக் கொண்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நோயாளிக்குப் பொருத்தமான ஆரோக்கிய வசதிகளைக் கொண்ட வீடொன்றை நிர்மாணித்து நோயாளியினால் நிர்க்கதிக்கு உள்ளாகும் குடும்ப உறுப்பினர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தரமான வீட்டை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்து புதிய வீடொன்றை நிர்மாணிப்பதாற்காக அதிகூடியது ரூபா 500,000.00 நிதி உதவியையும் வீட்டின் புனரமைப்புக்காக அதிகூடியது ரூபா 200,000.00 நிதி உதவியையும் இதன் மூலம் வழங்குவதற்கு

திட்டமிடப்பட்டுள்ளது. நிதி உதவி நான்கு கட்டங்களாக வழங்கப்படும். மீளாய்வாண்டில் 700 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 74.560 மில்லியன் நிதியை செலவிட்டு இந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்குப் பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டது.

3

9.2 மிகவும் வறிய குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டம்

குடும்பத்தின் மாதாந்த வருமானம் 4,000 ரூபாவுக்குக் குறைவாக உள்ள வீடமைப்புக் கடனை மீளச் செலுத்துவதற்கான இயலுமை அற்ற வாழ்க்கைத் துணைவருக்கு சுகப்படுத்த முடியாத நோயினால் பீடிக்கப்பட்டிருத்தல், நீண்டகாலமாக நோயாளியாக இருக்கும் விதவைகள், கணவன் அல்லது மனைவி கைவிட்டுச்சென்ற அல்லது விவாகரத்து செய்யப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தரமான வீட்டுக்கான தேவை இருக்கும். அத்தகைய நிரந்தரமான வீடுகள் இல்லாத குடும்பங்களுக்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலே சொல்லப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கான நிதியம் பொதுத் திறைசேரியினால் வழங்கப்படுகின்றது.

158 பயனாளிக் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 11.445 மில்லியன் நிதி வழங்கப்பட்டுள்ள அதேவேளை, அவற்றுள் 140 வீடுகள் பூர்த்தியடைந்துள்ளன. எஞ்சிய ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பூர்த்தியடையாத வீடுகளை 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.1 அட்டவனை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வீடமைப்புத் திட்டங்கள்

2016-12-31 இல் இருந்தவாறு முன்னேற்றம்

	நிகழ்ச்சித்திட்டம்	2016ஆம் ஆண்டுக்கான இலக்கு		நிதிமூலம் (ரூபா மில்லியன்)			அடைவு						திறைசேரியிலிருந்து கிடைத்த நிதி (ரூ.மி)
							அலகுகளின் எண்ணிக்கை		செலவினம் (ரூபா. மில்லியன்)				
		வீடுகள் (அலகு)	வருடாந்த ஒதுக்கீடு (ரூ.மி)	திறைசேரி	உள்ளக ஈட்டல்	செவண/ பிற	நிகழ். ஆரம்பம்	நிகழ். முடிவு	மொத்தம்	திறைசேரி	உள்ளக ஈட்டல்	செவண/ பிற	
	கிராமிய மற்றும் நகர வீடமைப்புத் திட்டம்												
1	மாதிரிக் கிராமத் திட்டம்	4,500	1,125.000	1,125.000			4,641	259	1,079.172	1,079.172			1,125.000
	1.1 வெலிஓயா கருத்திட்டம்	1,000	350.000	350.000			1,084	42	310.845	310.845			350.000
2	விசிறி வீட்டுத்திட்டம்	26,000	3,687.500	3,687.500			34,619	17,715	3,563.450	3,563.450			★ 3,704.500
	2.1 உதாகல கம்மான திட்டம்						1,180	207	135.633	135.633			
	2.2 விதவைகளுக்கான வீடமைப்புத் திட்டம்						158	140	11.445	11.445			
	2.4 சிறுநீரக நோயாளிகளுக்கான வீடமைப்புத் திட்டம்						700	1	74.560	74.560			
3	சம்பத் செவண (விசிறி)												
	3.1 விசிறி கடன்	2,575	900.000		900.000		3,685	2,120	267.666		267.666		
	3.2 விதவைகளுக்கான வீடமைப்புத் திட்டம்						44	25	3.840		3.840		
4	பூச்சுவேலை	75,000	637.500	637.500			77,509	77,509	641.899	641.899			637.500
5	செவண உதவி வீடமைப்புத் திட்டம் (லொத்தர் நிதயம்)					100.000		32				9.910	
	5.1 உதவித் திட்டம்	500	100.000				118	27	9.910			23.815	
	5.2 செவண மாதிரிக் கிராமத் திட்டம்						896		23.815				
6	நகர காணிகள் அபிவிருத்தித் திட்டம் (ஒசன் வியூ நிறுவனம்)	1,330	-						-				
7	நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீட்டுத்திட்டம்	500	-				672		-				
8	உபகர வீட்டுத்திட்டம்		15.000	15.000					15.000	15.000			15.000
9	வேறு வீட்டுத் திட்டங்கள்		-				10	-	0.435			0.435	
	உப மொத்தம்	**111,405**	**6,815.000**	**5,815.000**	**900.000**	**100.000**	**125,316**	**98,077**	**6,137.670**	**5,832.004**	**271.506**	**34.160**	**5,832.000**
	வீடமைப்புடன் தொடர்பான உதவிச் சேவைகள்												
10	உறுதிகள் வழங்குதல்												
	10.1 உரித்துறுதி	3,000						1,851					
	10.2 குத்தகை உறுதி	2,000						7,599					
									-				
	உப மொத்தம்	**5,000**	**-**	**-**	**-**	**-**	**-**	**9,450**	**-**	**-**	**-**	**-**	**-**
	மொத்தம	**116,405**	**6,815.000**	**5,815.000**	**900.000**	**100.000**	**125,316**	**107,527**	**6137.670**	**5832.004**	**271.506**	**34.160**	**5,832.000**
11	தொடர் நிகழ்ச்சித்திட்டம்												
	11.1 சம்பத் செவண	1,817	125.290		125.290			1,483	113.571		113.571		
	11.2 மாதிரிக் கிராமம்							9	4.295			4.295	
	11.3 இந்திய உதவி வீட்டுத் திட்டம்	1,609	136.300			136	66	1,438	64.375			64.375	
	11.4 வெளிவாரி நிதியத் திட்டம்						200	111	4.425			4.425	
	11.5 அரச / தனியார் வீட்டுத்திட்டம்	660	-					58	-				
	11.6 புனர்நிர்மாணத் திட்டம்	40	63.000			63			4.060			4.060	
	11.7 நகமு புரவர - பழைய வீட்டுத் திட்ட அபிவிருத்தி 2016 (கருதிட்)	1,258	240.000	240				503	84.093	84.093			240
	கடன் வழங்கல்								155.907	155.907			
	உப மொத்தம்	**5,384**	**564.590**	**240.000**	**125.290**	**199.300**	**266**	**3,602**	**430.726**	**240.000**	**113.571**	**77.155**	**240.000**
	மொத்தம்	**121,789**	**7,379.590**	**6,055.000**	**1,025.290**	**299.300**	**125,582**	**111,129**	**6568.396**	**6072.00**	**385.077**	**111.315**	**6,072.000**

3

3.2 ஆதன முகாமைத்துவம்

(i) இந்த அதிகாரசபையைச் சேர்ந்தவர்களும் வீடமைப்புத் திட்ட வீடுகள் மற்றும் காணிகளைப் பெறுவதற்காக சட்டத்தின் அங்கீகாரம் 8/1 பெறுவதற்காக மாவட்ட அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 2141 ஆகும். அவர்களில் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று மாவட்ட அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணக்கை 1423 ஆகும்.

(ii) இந்த அதிகார சபையில் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை சுவீகரித்தல் பின்வரும் விதத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

- அரச காணிகளைக் சுவீகரித்தல்
- காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழ் உள்ள காணிகளை சுவீகரித்தல்
- தனியார் காணிகளைக் சுவீகரித்தல்
- வேறு அரச நிறுவனங்களின் கீழ் உள்ள காணிகளை சுவீகரித்தல்

2016ஆம் ஆண்டில் 08 காணிகளை கைப்பறறக்கூடியதாக இருந்தது. ஏனைய இடங்களிலும் கைப்பற்றும் நடவடிக்கைகளில் பெரும்பாலானவை முடிவடைந்துள்ளன. அந்தக் காணிகளில் 05 காணிகளை மாற்றிக்கொடுப்பதற்கான சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் காணிகளைக் கைப்பற்றும் சட்டத்தின் 44ஆவது வாசகத்தின் கீழ் 02 காணிகள் தொடர்பான சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளது. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் மேலும் ஒரு காணிக்கான உறுதி வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்படாதுள்ள ஏனைய காணிகள் அனைத்தையும் மாற்றிக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளின் பல கட்டங்களை 2016ஆம் ஆண்டில் நிறைவேற்ற முடிந்தது. காணிகளுக்கான நட்டஈட்டை வழங்குவதற்காக 2016ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியின் ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தினால், நட்டஈடு வழங்கப்படவில்லை.

(iii) 2016ஆம் ஆண்டில் அரச ஆதனங்களை உள்ளூராட்சி அதிகார சபைக்கு மாற்றிக்கொடுப்பதற்காக 04 மாவட்டங்களில் 49 வீடமைப்புத் திட்டங்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) 2016ஆம் ஆண்டில் காணிகளை பாராதீனப்படுத்துவதற்காக 07 மாவட்டங்களில் 11 வீடமைப்புத் திட்டங்களுக்கான 33 காணிகள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(v) 2016ஆம் ஆண்டில் கொழும்பு நகர வடக்கு பிரதேசம் மற்றும் மேலும் 09 மாவட்டங்களில் 4.56 ஹெக்டயர் காணியில் அனுமதியின்றி வசிக்கும் 232 பேருக்கு சட்டரீதியாக வாழ்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

3.2 அட்டவனை

2016 ம் ஆண்டிற்குள் விற்பணை செய்யப்பட்ட வீடுகள்

தொடர் இல.	வீடமைப்புத் திட்டம்	வீடுகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட கழிவு
01.	117 தோட்டம்கட்டம் V	01	-
02.	சியனே உயன, யக்கல கட்டம்மை	09	
03.	வெலன்கொல்லவத்த வீடமைப்புத் திட்டம், குருணாகலை	10	10%
04.	ஹோமாகம ஜல்தர அரச ஊழியர் வீடமைப்புத் திட்டத்துக்காக கைப்பற்றப்பட்ட வீடுகள்	05	
05.	பிலியந்தல சைமண்டேல் வீடமைப்புத் திட்டம்	01	-
			-

3.3 பொறியியல் சேவை மற்றும் நிர்மாணம்

பொறியியல் சேவை மற்றும் நிர்மாணப் பிரிவுகள் பின்வரும் பகுதிகளை உள்ளடக்கியுள்ளன.

- பொறியியல் பிரிவு
- கட்டிடக்கலைப் பிரிவு
- தொகை மதிப்புப் பிரிவு
- திட்டமிடல் பிரிவு
- மின்சாரப் பிரிவு
- பராமரிப்புப் பரிவு

2016ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் எல்லா மக்கள் பிரிவினதும் வீடமைப்பு நோக்கம் மற்றும் அது சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியதாக இருந்தது.

- தொடர்மாடி புனரமைப்புத்திட்டம் (நகமு புரவர)

பழைய தொடர்மாடி வீடுகளையும் அவற்றின் சகல அடிப்படை வசதிகளையும் நவீனமயப்படுத்தி குடியிருப்பாளர்களுக்கு சிறந்ததொரு குடியிருப்பாக மாற்றியமைத்தல். முகாமை குழுக்களைதோற்றுவித்து வீடமைப்பு திட்டங்களை பராமரிக்கும் பொறுப்பினை வீட்டு உரிமையாளர்களிடம்ஒப்படைத்தல் மற்றும் பொதுவசதிகளை பராமரித்தல் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிநிறுவனங்களுக்கு சட்டரீதியாக ஒப்படைத்தல் நகமுபுரவ வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

நகமு புரவர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

- கருத்திட்டத்தின் மதிப்பீடு - ரூபா 1033.06 மில்லியன்
- பழைய நான்கு மாடிகளைக்கொண்ட வீடுகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் நவீனமயப்படுத்தல்
- நோக்கம் -குடியிருப்பாளர்களின் வசிப்பிட வசதிகளை மேம்படுத்தல்
- முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்து நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களை அவற்றிடம் ஒப்படைத்து பராமரிப்பு வேலைகளுக்குப் பொறுப்பாக்குதல்
- வீதிகள், வடிகான்கள், மின்விளக்குகள் மன்றும் கழிவு முகாமைத்துவத்தை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு ஒப்படைத்தல்.

3

3.3 அட்டவனை

2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கருத்திட்டங்கள்

நகமு புரவர 2013 தொடரும் நிகழ்ச்சித்திட்டங்கள்

கருத்திட்டம்	பயனாளிக் குடும். எண்ணி.	மதிப்பிடப்பட்ட தொகை ரூபா. மில்.	ஒப்பந்-தக்காரர்	2016.12.31இல் முன்னேற்றம்	
				பௌதீக முன்னேற்றம் %	நிதியியல் முன்னெற்றம் ரூபா. மில்.
I.சொய்சாபுர வீடமைப்புத் திட்டம் (கட்டம் II) மழைநீர் வடிந்தோடுவதற்கான முறைமை		11.53	அரச பொ-றியியல் கூட்டுத்	90	7.55
II.சொய்சாபுர வீடமைப்புத் திட்டம் (கட்டம் II) மலக்குழி புனரமைப்பு B1இ B2, B3, B4 & B5	960	19.60	தாபனம்	95	10.59
III. சொய்சாபுர வீடமைப்புத் திட்டம் (கட்டம் II) மலக்குழி புனரமைப்பு B6, B7, B8, B9 O&P கட்டம் - ஏ நாட்கள் 147		13.67	அ/தே	100	8.72
IV.மிஹிந்து மாவத்தை வீடமைப்புத் திட்டம்	125	23.5	அ/தே	91	19.25
V. புளுமெண்டால் வீடமைப்புத் திட்டம்	392	60.0	அ/தே	88.2	53.13
VI.ஆமர்வீதி வீடமைப்புத் திட்டம்	310	33.0	அ/தே	85.6	24.65
			அ/தே		

3

3.4 அட்டவனை

நகமு புரவர 2014 தொடரும் நிகழ்ச்சித்திட்டங்கள் (பாரிய அளவிலான கருத்திட்டங்கள்)

இல	கருத்திட்டம்	பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை	உத்தேச தொகை ரூபா. மில்.	ஒப்பந்தக்காரர்	2016.12.31இல் முன்னேற்றம்	
					பௌதீக முன்னேற்றம்%	நிதியியல் முன்னேற்றம
01	சைமன்டேல் கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்தல்	48	16.60	அரச பொறியியல் கூட்டுத்தாபனம்	20%	4.57
02	ஏலவிட்டிவல வீடமைப்புத் திட்டம்	232	94.40	அரச பொறியியல் கூட்டுத்தாபனம்	18%	19.09
03	சித்திரா லேன் வீடமைப்புத் திட்டம்	200	96.30	அரச பொறியியல் கூட்டுத்தாபனம்	48%	25.10
04	மாளிகாவத்தை புகையிரத ஊழியர் வீடமைப்புத் திட்டம்	100	52.50	அரச பொறியியல் கூட்டுத்தாபனம்	17.5%	10.57
05	டயஸ் பிளேஸ் வீடமைப்புத் திட்டம்	303	75.30	அரச பொறியியல் கூட்டுத்தாபனம்	10%	15.39
06	கம்மல்வத்தை வீடமைப்புத் திட்டம்	72	15.80	அரச பொறியியல் கூட்டுத்தாபனம்	98.5%	6.22
				அ.்.தே		

3.5 அட்டவனை

நகமு புரவர 2014 தொடரும் நிகழ்ச்சித்திட்டங்கள் (சிறிய அளவிலான கருத்திட்டங்கள்)

இல	கருத்திட்டம்	பயனாளிக் குடும்பங் களின் எண்ணி க்கை	உத்தேச தொகை	ஒப்பந்தக்காரர்	2016.12.31இல் முன்னேற்றம்	
					பௌதீக முன்னேற்றம் %	நிதியியல் முன்னேற்றம்
1.	கல்சிசை மாடி வீடமைப்புத் திட்டம்	52	24.06	அரச பொறியியல் கூட்டுத்தாபனம்	96%	12.88
2.	போபஸ் வீதி வீடமைப்புத் திட்டம்	160	29.77	அ/தே	55%	6.54
3.	கென்ற் வீதி மாடி வீடமைப்புத் திட்டம்	30	8.77	அ/தே	85%	3.95
4.	பாமன்கடை வீடமைப்புத் திட்டம்	14	14.80	அ/தே	20%	2.86
5.	டொறிங்டன் வருமானம் குறைந்தோருக்கான வீடமைப்பும் திட்டம்	24	14.50	அ/தே	11%	2.80
6.	மெனிங் டவுன் மாதா வீதி வீடமைப்புத் திட்டம்	16	5.50	அ/தே	45%	1.06
7.	கோதமிபுர வீடமைப்புத் திட்டம்	48	25.40	அ/தே	70%	7.43

3.6 அட்டவனை

நகமு புரவர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2016

இல.	கருத்திட்டத்தின் பெயர்	வீடுகளின் எண் ணிக்கை	ஒப்பந்தத் தொகை (ரூபா.மில்) 11% + 3% சே.பெ. வரியுடன்	2016.12.31இல் முன்னேற்றம்		
				பௌ தீக	நிதி ரூபா. மில்	ஒப்பந்தக்காரர்
01	டொறிங்டன் வீடமைப்புத் திட்டம் மாடி வீட்டுப் புனரமைப்பு	16	7.68	100	7.99	பிறயன் பொறியியல் கம்பனி
02	சொய்சாபுர வீடமைப்புத் திட்டம் (வீதி மற்றும் வடிகான் மட்டும்)	-	18.91	89	9.23	ருவன் ரேட் நிறுவனம்
03	விபுலசேன மாவத்தை வீடமைப்புத் திட்டம்	72	13.14	95.5	6.50	தர்மதாச கன்ஸ்ட்றக்சன் கம்பனி
04	ஆமர் வீதி வீடமைப்புத் திட்டம்	310	26.16	50	9.17	காமினி கன்ஸ்ட்றக்சன்
05	டயஸ் பிளேஸ் வீடமைப்புத் திட்டம்	303	50.64	60	16.46	காமினி கன்ஸ்ட்றக்சன்
06	டொறிங்டன் வீடமைப்புத் திட்டம் (வருமானம் குறைந்தோர்)	24	12.85	100	4.84	காமினி கன்ஸ்ட்றக்சன்
07	நவலோக வீடமைப்புத் திட்டம்	41	7.48	100	5.72	காமினி கன்ஸ்ட்றக்சன்
08	117 தோட்டம் எல்விட்டிகல (வருமானம் குறைந்தோர்)	32	10.00	28	2.00	பிறயன் பொறியியல் கம்பனி
09	மெனிங் டவுன் மாதா வீதி	16	5.30	60	2.99	பிறயன் பொறியியல் கம்பனி
10	மத்தேகம சாப்பு கட்டிடத் தொகுதி	30	16.55	82	6.79	ருவன் ரேட் நிறுவனம்
11	வீடுகள்	24	3.10	100	0.60	விக்கிரமசிங்க பில்டர்ஸ்
12	கடை அறைகள்	100	38.50	25	11.30	தர்மதாச கன்ஸ்ட்றக்சன் கம்பனி
13	மயுர பிளேஸ் வீடமைப்புத் திட்டம்	80	16.58	02	-	டெட் லங்கா (பிறை) கம்பனி
14	மாளிகாவத்தை புகையிரத ஊழியர் வீடமைப்புத் திட்டம்	128	29.47	02	-	பத்மினி கன்ஸ்ட்றக்சன்
15	ஹிம்புட்டு உயன வீடமைப்புத் திட்டம	48	16.27	35	-	பத்மினி கன்ஸ்ட்றக்சன்
16	சித்திரா லேன் வீடமைப்புத் திட்டம்	14	14.54	-	-	பத்மினி கன்ஸ்ட்றக்சன்
17	சைமன்டேல் வீடப்புத் திட்டம்	80	24.74	-	-	டெட் லங்கா (பிறை) கம்பனி
18	பாமன்கடை வீடமைப்புத் திட்டம்	112	5.36	-	-	மீண்டும் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

3

3.7 அட்டவனை
ஏனைய கருத்திட்டங்கள்

நிர்மாணம் ஆரம்பித்த ஆண்டு	கருத்திட்டம்	ஒப்பந்தத் தொகை (ரூ.மி) 11%+ 3% சே.பெ.வரி	2016.12.31இல் முன்னேற்றம்		ஒப்பந்தக்காரர்
			பௌதீக	ரூபா மில்	
2014	கொழும்பு மாவட்ட அலுவலகம் தரைத்தள நிர்மாணம்	17.45	68	9.13	இனோவேற் பொறியியல் (தனியார்) கம்பனி
2015	சொய்சாபுர புனரமைப்புக் கருத்திட்டம் கட்டம் - III சொய்சாபுர புனரமைப்புக் கருத்திட்டம் கட்டம் - III வீடுகள் - 60 வலயம் 1 – 20 வலயம் 2 – 20 வலயம் 3 – 20 நாட்கள் 728	வலயம் 1 - 55 வலயம் 2 - 55 வலயம் 3 - 55	35 (வலயம் -1)	39.9 (வலயம் - 1)	அரச பொறியியல் கூட்டுத்தாபனம்
	யாழ்ப்பாண சுற்றுலா விடுதி	1.72	90	1.41	பிரவின் சந்தைப்படுத்தல் கம்பனி
	ஹந்தானை சுற்றுலா விடுதி	5.53	27	1.09	ரோஹித சப்ளையர்ஸ்
2016	மன்னார் மாவட்ட அலுவலகம் நவீனமயப்படுத்தல்	9.56	100	6.5	மகாதேவன் ஒப்பந்தக்காரர்

அரச, தனியார் ஒருங்கிணைந்த அபிவிருத்தி (கருத்திட்டங்கள்)

2016 ஆம் ஆண்டில்நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருந்த, தற்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கருத்திட்டம்

- யக்கல, சியனே உயன சொபா உயன வீடமைப்புக் கருத்திட்டம் (42 வீடுகள்)
- கலுகல பல்லே கெலே றிஸன்ட் பூந்தோட்ட வீடமைப்புத் திட்டம் (21 வீடுகள்)
- பல்லேகெலே லிவிங் ஹோம் வீடமைப்புத் திட்டம் (39 வீடுகள்)

ஏனைய கருத்திட்டங்கள்

- ஹந்தானை பதனவத்த நவீனடமைப்புக் கருத்திட்டம் (ஹந்தானை வேலைத்தளம் III)
  - o வீடுகளின் எண்ணிக்கை 20. இந்தக் கருத்திட்டம் அமைந்துள்ள பிரதேசம் மண்சரிவு அபாயத்துக்கு உட்படக்கூடியது என்பதால் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் விசேட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அது பற்றிய அறிக்கை 2017.01.23ஆம் திகதி கிடைத்தது. இதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அமைச்சரவை நிருபம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

- கிருலப்பனை மிஹிந்துபுர வீடமைப்புக் கருத்திட்டம்
  - o சட்டத்துறைத் தலைமை அதிபதி திணைக்களம் மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனமாகிய அரச பொறியியல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் ஆலோசனையின் பிரகாரம் அபிவிருத்தியை மேற்கொள்பவரின் பணியின் தாமதத்தை கவனத்தில் கொண்டு 2016.11.18ஆம் திகதி கருத்திட்டம் தொடர்பான உடன்படிக்கையை இரத்துச்செய்யும் அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டது. ஒப்பந்தக்காரர் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால்,மத்தியஸ்த சபைக்கு விடயம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

துரித நடுத்தர வகுப்பு வீடமைப்பு அபிவிருத்தி

நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு 05 வருடத்தினுள் ஐந்து இலட்சம் வீடுகளை நிர்மாணிப்பதே இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை இந்தக் கருத்திட்டக் குழுவின் பிரதான நிறுவனங்களாகும். இதன் ஆரம்ப கட்டத்துக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றிடம் உள்ள காணி பயன்படுத்தப்படும்.

- தம்புவவத்த, றாகம - 116 வீடுகள்
- நுககஹகனத்தவத்த, பாணந்துறை - 196 வீடுகள்
- ஜல்தர இரண்டாவது கட்டம், அத்துருகிரிய - 352 வீடுகள்
- மவுன்ட் கிளிபட்வத்தை, ஹோமாகமை - 860 வீடுகள்

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கருத்திட்டங்கள்:

- ரண்பொகுணுகம், அத்தனகல்ல
- வெரல்லவத்தை, யக்கல
- லங்கா லோக, யக்கல
- கெப்டன் கார்டன் வத்தை, அக்மீமன
- இஸ்காகாரவத்தை, குண்டசாலை, கண்டி.

மனிதவள முகாமைத்துவம்

3.4 மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரிவு பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. மனிதவள முகாமைத்துவப் பிரிவு
2. நிர்வாகப் பிரிவு
3. ஒழுக்காற்றுப் பிரிவு
4. போக்குவரத்துப் பிரிவு
5. பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
6. பணியாளர் வீடமைப்புக் கடன் பிரிவு
7. பாதுகாப்புப் பிரிவு
8. செவண ஆய்வு நிலையம்
9. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வெப் தளம் மற்றும் சமூக ஊடகங்களைத் (Social Media) தொழிற்படுத்தல் கணனி மென்பொருள் தயாரித்தல் மற்றும் கணனி வன்பொருள்களைப் பேணுதல் பிரிவு
10. சுவடிகள் கூடம் மற்றும் நூல் கட்டும் பிரிவு

3.4.1 மனித வள முகாமைத்துவப் பிரிவு

2016 ஆம் ஆண்டில் மனித வளப்பிரிவில் நடைபெற்ற செயற்பாடுகள்

1.1 2016.12.31இல் இருந்தவாறு பணியாளர் குழு பற்றிய தகவல்கள் பின்வருமாறு:

தொ. இல.	சேவை மட்டம்	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள எண்ணிக்கை
01	சிரேஷ்ட முகாமைத்துவம்	115	88
02	மூன்றாம்நிலை முகாமைத்துவம்	157	301
03	இரண்டாம்நிலை முகாமைத்துவம்	899	1405
04	ஆரம்ப	205	349
	மொத்தம்	1376	2143

1.2 2016.12.31ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள்

நேரடி நியமனங்கள்				ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் ஆட்சேர்ப்பு		மொத்தம்
நிரந்தரம் ஒப்பந்தம்						
நிறைவேற்று	நிறைவேற்றுத் தரம் அல்லாத	ஒப்பந்தம்	நாளாந்த	நிறைவேற்று	நிறைவேற்றுத் தரம் அல்லாத	
-	30	74	20	--	--	124

1.3 2016.01.01 முதல் 2016.12.31 வரையான காலப்பகுதியினுள் உள்ளக பதவி உயர்வுகள் பின்வருமாறு வழங்கப்பட்டன.

தொ.இல	சேவை மட்டம்	பதவி உயர்வுகள்
01	சிரேஷ்ட முகாமைத்துவம்	05
02	மூன்றாம் நிலை முகாமைத்துவம்	01
03	இரண்டாம் நிலை	-
04	ஆரம்ப நிலை	-
	மொத்தம்	06

1.4 2016.01.01 முதல் 2016.12.31 வரையான காலப்பகுதியினுள் ஓய்வு பெற்ற மற்றும் ஒப்பந்தக்காலம் முடிவடைந்த ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி விலகிய ஊழியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

தொ.இல	சேவை மட்டம்	ஓய்வு பெறல்	ஒப்பந்தம் முடிவடைதல்	பதவி விலகுதல்	மொத்தம்
01	சிரேஷ்ட முகாமைத்துவம்	7	-	2	09
02	மூன்றாம் நிலை முகாமைத்துவம்	32	-	4	36
03	இரண்டாம் நிலை	42	02	38	82
04	ஆரம்ப நிலை	19	2	01	22
	மொத்தம்	100	4	45	149

1.5 2016.01.01 முதல் 2016.12.31 வரையான காலப்பகுதியினுள் இந்த அதிகார சபையின் சேவையில் இருக்கும்போது மரணமடைந்தோரின் எண்ணிக்கை 04 ஆகும்.

1.6 2015.01.01 முதல் 2015.12.31 வரை பல்கலைக் கழகங்களில் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவ மாணவிகளுக்கு செய்முறைப்பயிற்சி வழங்குதல்

பயிற்சிக்காக சேரத்துக்கொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை 624

இவ்வருடத்தில் பயிற்சிக்காலம் முடிவடைந்தோரின் எண்ணிக்கை 9

3.4.2 நிர்வாகப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகப் பிரிவை உள்ளிட்ட மாவட்ட அலுவலகங்களுக்கான நிர்வாக சுற்றறிக்கைகளை வழங்குதல், மேலதிக நேர வேலை,இணைந்த கொடுப்பனவுகள், பிரயாண செலவினக் கொடுப்பனவுகள், வீட்டுக் கூலிக் கொடுப்பனவுகளை உள்ளிட்ட பிற கொடுப்பனவுகளை அங்கீகரித்தல், மற்றும் அலுவலக முகாமைத்துவ ஆலோசனைகளை வழங்குதல், நாளாந்த தபால் முகாமைத்துவம், நாளாந்த வருகை தருதல் மற்றும் விட்டுச்செல்லுதல் மற்றும் லீவு முகாமைத்துவம், இடர்

கடனுதவி, மிகையூதியம், ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் ஓய்வு விடுமுறைக் கொடுப்பனவு வழங்குதல், மருத்துவப் பயன்கொடுப்பனவுகள் வழங்குதல், தலைமை அலுவலகக் கட்டிடத்தைக் காப்புறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளிட்ட நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரிவு இதுவாகும். இந்தப் பிரிவின் கீழ் பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

3

2016 ஆம் ஆண்டுக்கான நிர்வாகப் பிரிவின் செயலாற்றங்கள்

01. 2016ஆம் ஆண்டில் மிகையூதியக் கொடுப்பனவுகளாக 2,000/-ரூபாவும் (சம்பளமற்ற லீவு பெறாதோருக்கு) கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளாக 5,000/-ரூபாவும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.

02. கடந்த ஆண்டில் பெறப்படாத ஓய்வு விடுமுறைக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

03. மருத்துவ சிகிச்சைக்காக ஊழியர்களுக்கு பின்வருமாறு கொடுப்பனவு வழங்கப்பட்டது.

சாதாரண வெளிநோயாளர் சிகிச்சை - ரூபா 5,000 - 20,000 வரை

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறல் - ரூபா 10,000 - 40,000 வரை

வைத்தியசாலையில் தங்கி அறுவைச்சிகிச்சை மற்றும் மருத்துவ சேவை பெறல் - ரூபா 15,000 - 60,000 வரை

அரச வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறல் - ரூபா 15,000 - 60,000 வரை

தொற்றுநோய்களுக்கான சிகிச்சை (பொது சுகாதார மருத்துவ அதிகாரியின் சான்றிதழுக்கு இணங்க வழங்கப்படுவதுடன் அதிகூடியது 14 நாட்கள் வரை) - ரூபா 100 - 400 வரை

புற்றுநோய், சிறுநீரக நோய் பாரதூரமான அறுவைச் சிகிச்சை - ரூபா 150,000 - 600,000 வரை

சம்பளத்தில் இருந்து கழிக்கப்படும் தொகையின் அடிப்படையில் வழங்கப்படும் தொகை தீர்மானிக்கப்படும்.

3.4.3 ஒழுக்காற்றுப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களுக்கு ஒழுக்க சீர்கேடான செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்துகொள்வதற்கு வழிகாட்டி அவர்கள் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் பிரிவாக ஒழுக்காற்றுப் பிரிவை அடையாளப்படுத்தலாம்.

2016 ஆம் ஆண்டில் ஒழுக்காற்றுப் பிரிவின் சாதனைகள்

01. 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற ஒழுக்காற்று நடவடிக்கைகளில் எண்ணிக்கை 102 ஆகும் என்பதுடன் அவற்றுள் பாரதூரமான துர்நடத்தைகளின் எண்ணிக்கை 52 ஆகும். அவற்றுள் 2016ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாத ஒழுக்காற்று நடவடிக்கைகளின் எண்ணிக்கை 20 ஆகும்.

02. 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்த சிறிய துர்நடத்தைச் செயல் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் 50 மேற்கொள்ளப்பட்டதுடன் 2016ஆம் ஆண்டில் அறிக்கை செய்யப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை 44 ஆகும். அவற்றுள் 86 சம்பவங்கள் மன்னிப்பதற்கான வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு முடிவுறுத்தல் / மிகக்கடுமையாக எச்சரித்தல் மற்றும் எச்சரித்தல் மூலம் தீர்க்கப்பட்டுள்ளதுடன் 2016ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாத சிறிய துர்நடத்தைகளின் எண்ணிக்கை 08 ஆகும்.

3.3.4 போக்குவரத்துப் பிரிவு

மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரிவின் கீழ் உள்ள மற்றுமொரு அலகு போக்குவரத்துப் பிரிவாகும். குறிப்பாக அதிகார சபையின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு அவசியமான போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு செய்து வழங்குதல், வாகனங்களைப் பராமரித்தல், வாகனங்களை நிறுத்திவைக்கும் இடம் மற்றும் வாகனக் கூடம் ஆகியவற்றைப் பேணுதல் இதன் பிரதான பணியாகும்.

2016ஆம் ஆண்டில் போக்குவரத்துப் பிரிவின் இலக்குகள்

1. பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட வாகனங்களை கேள்விப்பத்திரங்களைக் கோரி தகுந்த முறையில் கையுதிர்த்தல்.

2. பயனுறுதியான எரிபொருள் பாவனைக்காக தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகத்திலும் பெரும்பாலான வாகனங்களின் எரிபொருள் பாவனையை பரீட்சீலித்தல்

3. நிறுவனத்தின் வாகனக் கூடத்தில் வாகனங்கள் திருத்தப்படுவதால் நிதிச் செலவுகளை இழிவளவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

4. தொழிற்படுத்தல் குத்தகை அடிப்படையில் 15 கெப் வாகனங்களையும் 03 ஜீப் வண்டிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அதன் மூலம் மாவட்ட அலுவலகங்களில் உள்ள வாகனங்களின் போக்குவரத்து வசதியை

அதிகரித்து வலுவூட்டல்.

5. எல்லா வாகனங்களையும் காப்புறுதி செய்தல் மற்றும் வாகனங்களில் வருமான வரிப் பத்திரத்தை தகுந்த முறையில் வழங்குதல்.

6. வாகன ஓட்டுனர்களுக்கு / உதவியாளர்களுக்கு 3 சீருடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

7. பயன்படுத்தப்படும் எரிபொருள் எல்லையை ரூபா 16.9 மில்லியனை எதிர்காலத்தில் ரூபா 8.2 மில்லியனாகக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

8. வாகனங்களைத் திருத்துவதற்கு செலவாகும் ரூபா 13 மில்லியனை எதிர்காலத்தில் ரூபா 6.3 மில்லியனாகக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

3.4.5 பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகம் உள்ளடங்கலாக மாவட்ட அலுவலகங்களின் விடயங்கள் பற்றிய பயிற்சியின் தேவைப்பாட்டை அடையாளம் கண்டு அது தொடர்பாக அவசியமான எல்லா நடவடிக்கைகளும் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

3

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2016.01.01 முதல் 2016.12.31 வரை முன்னேற்றம்

	நிகழ்ச்சித்திட்டத்தின் விபரம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியோர் எண்ணிக்கை	செலவிட்ட தொகை (ரூ)
1	2016.01.01 முதல் 2016.12.31 வரை நடைபெற்ற:			
	உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்			
1.1	புதிய நகர வீடமைப்புத் திட்டம் பற்றிய கலந்துடையாடலும் நிர்மாணமும்	1	77	14,950.00
1.2	புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான சேவை முன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	1	26	37,300.00
1.3	புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட பொறியியலாளர்களுக்கான சேவை முன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	1	6	-
1.4	செவண கற்கை நிலையத்துக்கான செலவினம்	-		22,217.00
1.5	கொள்வனவு முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு	1	103	35,000.00
1.6	ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத செயலமர்வு	1	1	1,000.00
1.7	கணக்கியல் / கணக்காய்வு அலுவலர்களுக்கான சேவை முன் நிகழ்ச்சித்திட்டம்	1	16	-
1.8	சம்பள மாற்றம் தொடர்பான செயலமர்வு	1	90	50,000.00
1.9	அலுவலக முகாமைத்துவம் மற்றும் ஒழுக்காற்று கோவை தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வு	1	47	33,550.00
1.1	அதே செயலமர்வு	1	86	89,634.00
2	உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (உள்நாடு) (90%)	34	85	416,070.00
3	உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (உள்நாடு) (50%)	3	17	65,275.00
4	வெளிநாட்டு சுற்றுலா	3	3	3,284,540.00
5	வெளிநாட்டு புலமைப்பரிசில்	1	1	511,728.00
6	சுயதேர்வு பயிற்சிக் கடன் திட்டம்	12	15	734,500.00
	மொத்தம்	**62**	**573**	**5,295,764.00**

3

3.4.6 பணியாளர் வீடமைப்புக் கடன் பிரிவு

தலைமை அலுவலகம் உள்ளடங்கலாக மாவட்ட அலுவலகங்களில் நிரந்தர சேவையில் இருக்கும் (நன்னடத்தைக் காலம் முடிவடைந்த) பணியாளர்களுக்காக பணியாளரின் அடிப்படைச் சம்பளம் மற்றும் 60 வயது வரை எஞ்சிய சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு அவரின் கடன் வேண்டுகோள் விடுக்கும் நிலைமையைப்பொறுத்து அடகு அடிப்படையில்4.2% இல் பணியாளர் வீடமைப்புக் கடன் வழங்குதல் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த வீடமைப்புக் கடன் நிதி அதிகூடியது ரூபா 1,500,000 ஆகும் என்பதுடன் கடன் அறவிடும் கால எல்லை அதிகூடியது 15 வருடங்கள் ஆகும்.

2016ஆம் ஆண்டுக்கான இலக்குகள்

2016ஆம் ஆண்டுக்காக ரூபா 157.728 மில்லியன் பணியாளர் வீடமைப்புக் கடனுக்காக ஒதுக்கப்பட்டது. அந்த ஒதுக்கீடுகளில் பிரதான காரியாலயத்தில் பின்வரும் விதத்தில் வீடமைப்புக்கடன் அங்கீகரிக்கப்பட்டது.

3.8 அட்டவனை

தலைமை அலுவலகம் ரூபா	மாவட்ட அலுவலகம் ரூபா	செலுத்திய முழுத்தொகை ரூபா
12,058,900.00	12,735,700.00	24,794,600.00
11,457,000.00	12,839,100.00	24,296,100.00
23,408,200.00	25,760,090.00	49,168,290.00
-	800,000.00	800,000.00
46,924,100.00	52,134,890.00	99,058,990.00

அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடு, செலவிடப்பட்ட தொகை மற்றும் எஞ்சியவை பின்வருமாறு:

3.9 அட்டவனை

அலுவலகம்	அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடு ரூபா	செலுத்திய தொகை ரூபா	மீதி ரூபா
தலைமை அலுவலகம்	48,379,800.00	46,924,100.00	1,455,700.00
மாவட்ட அலுவலகம்	109,347,900.00	52,134,890.00	57,213,010.00
மொத்தம்	157,727,700.00	99,058,990.00	58,668,710.00

2016ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தில் 66 ஊழியர்களும் மாவட்ட அலுவலகங்களில் 72 ஊழியர்களுமாக வீடமைப்புக் கடன் பெற்றுக்கொண்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 138 ஆகும்.

3.4.7 பாதுகாப்புப் பிரிவு

அடைந்த இலக்குகள்

i. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பாதுகாப்புப் பிரிவு, அதிகார சபையின் அசையும் / அசையாச் சொத்துகள் மற்றும் மனித வளம் ஆகியவற்றைப் பாதுகாத்தல், நிறுவனத்தின் நற்பெயரையும் ஏனைய விடயங்களையும் பாதுகாப்பதற்காக முழுமையான பலத்துடனும் முறையாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

ii கடந்த ஆண்டில் பயங்கரவாதம் இல்லாதபோதிலும் தொடர்ந்தும் முன்னர் வழங்கிய பாதுகாப்புச் சேவை மேற்கொள்ளப்படுகின்றது.

iii. 2016 ஜனவரி மாதமளவில் பாதுகாப்புப் பணியாளர்கள் 103 வரை குறைக்கப்பட்டபோதிலும் பாதுகாப்பு சேவையை தொடர்ந்தும் மேற்கொள்ளவேண்டியிருந்தது.

iv. தலைமை அலுவலகம் மற்றும் தலைமை அலுவலக நிர்வாகம் போன்ற சேவை நிலையங்கள் பலவற்றுக்கு பாதுகாப்பு அலுவலர்கள் பல்வேறு முறைமைகளைப் பயன்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தினர்.

பாதுகாப்பு அலுவலர்களால் தலைமை அலுவலகம் / மாவட்ட அலுவலக கட்டிடத்தொகுதி நீங்கலாக பாதுகாப்புச் சேவை வழங்கப்பட்ட நிலையங்கள்:

1. ஜல்தர அரச ஊழியர் வீடமைப்புக் கருத்திட்டம்
2. மாளிகாவத்தை பெரிய கூ சிறிய பிரதீபா மண்டபம்
3. மோதரை கூ குணசிங்கபுர பிரதீபா மண்டபம்
4. சொய்சாபுர வலய அலுவலகம்
5. இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரித்தாக்கப்பட்ட காணி
6. தியவன்னா வீடமைப்புத் திட்டம்
7. பர்கியூஷன் வீடமைப்புத் திட்டம்

இலக்குகளை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அவற்றின் பயன்களும்

i. தலைமை அலுவலகம் மற்றும் வீடமைப்பு செயலாளர் அலுவலக கட்டிடங்களில் அமைந்துள்ள அலுவலகங்களுக்கு வரும் வாகனங்கள் கூ ஆட்கள், மற்றும் பொதிகள் போன்றவற்றைப் பரீட்சித்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்புதல்.

ii. பாதுகாப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வகுப்புகளை நடத்துதல், மாவட்ட அலுவலகம் மற்றும் எல்லா சேவை நிலையங்களுக்கும்

அவசியமான உத்தியோகபூர்வ அறிவுறுத்தல்களை எழுத்தில் வழங்குதல். அந்த அறிவுறுத்தல்கள் தொடர்பாக பிரிவுத் தலைவர்கள் மற்றும் மாவட்ட முகாமையாளர்களுக்கு அறிவூட்டல், பாதுகாப்பு அலுவலர்களின் பொறுப்பு மற்றும் கடமைகள் தொடர்பாக பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவூட்டல்.

iii. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நற்பெயருக்கு பங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்த்தல் மற்றும் ஏமாற்று வேலைகள் மற்றும் நட்டத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை செய்தல் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்கு ஒத்துழைத்தல்.

iv. கொம்பனிவீதி பொலிஸ் நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள நிறுவனங்கள், பாதுகாப்புக் குழுக்களின் கூட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் அறிவுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவை தொடர்பாக பாதுகாப்புப் பிரிவுக்கு அறிவூட்டல்.

v. வீடமைப்பு செயலாளரின் கட்டிடத்தைப் பாதுகாப்பதற்காக தீயணைப்புப் பிரிவினரைப் பயன்படுத்துதல்.

vi. நீதிமன்றக் கட்டளைகள் வழங்கப்பட்ட அங்கீகாரமற்ற குடியிருப்பாளர்களை அகற்றும் நடவடிக்கை தொடர்பாக பாதுகாப்பு அலுவலர்களைப் ஈடுபடுத்தல் மற்றும் வெற்று இடங்களைப் பொறுப்பேற்ற வீடுகளுக்கு மீண்டும் நுழைவதைத் தடுப்பதற்கு அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் மற்றும் பூர்வாங்க விசாரணை அறிக்கைகளைத் தயாரித்தல்.

3.4.8 செவண ஆய்வு நிலையம்

தலைமை அலுவலகத்தின் 9ஆம் மாடியில் அமைந்திருந்த நூலகம் கொழும்பு மாநகர வடக்கு அலுவலகத்தில் மிகவும் இடவசதி உள்ள வளாகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. ஆய்வு நிலையத்தின் நிர்வாகத்துக்காக வோறாக அலுவலர் ஒருவரும் பணியாளர்களும் நியமிக்கப்பட்டனர். அவ்வாறாக உயர் கல்வியை மேற்கொள்ளபவர்களுக்கும் கல்விச் செயற்பாடுகளுக்காக வெளி வாசகர்களுக்கும் அவசியமானபோது தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமானவாறு முறைமையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

மேலும், கல்விமான்கள், மாணவர்கள் மற்றும் நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்களுக்காக ஆராய்ச்சிக் கட்டுரை, நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் செவண வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுடன் தொடர்பான புதைப்படங்கள் மற்றும் வீடமைப்புக் கருத்திட்ட மாதிரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு நூல்களையும் பத்திரிகைகளையும் பயன்படுத்துவதற்காக சுமார் 100 வாசகர்கள் வருகைதருகின்றனர்.

எதிர்வரும் வருடத்தில் பயிற்சி நிலையம் ஒன்றைத் தாபித்து பிரபல்யமான உரைகள் மற்றும் கற்கைநெறிகள் பிரிவையும் ஒருங்கிணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

3.4.9 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வெப்தளம் மற்றும் சமூக ஊடகங்களைத் தொழிற்படுத்தும் மற்றும் கணனிப் பிரிவு

அடிப்படை மட்டத்தில் இயங்கிவந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வெப் தளம் புதிய தொழில்நுட்ப மற்றும் நவீன கணனி நிபுணர்களின் மூலம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. அதன்மூலம் முழு உலகத்துக்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல், வீட்டுத் தேவை உள்ள மக்களுக்கு அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசியமான தகவல்களையும் அறிவையும் வழங்குதல் "செமட்ட செவண" மாதாந்த சஞ்சிகையை வெளியிடுதல் மற்றும் கௌரவ அமைச்சரின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் புகைப்படத் தொகுப்பை வெளியிடுதல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

நிறுவனத்தின் பணியாளர்கள் தொடர்பான இற்றைவரையான தகவல்களையும் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வாசகர்கள் அறிந்துகொள்ள முடியும். எதிர்காலத்தில் மேலும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாவட்ட அலுவலகங்கள் மற்றும் எல்லா நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் தகவல்களை இற்றைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

3.4.10 சுவடிகள் கூடம் மற்றும் நூல் கட்டும் பிரிவு

திணைக்கள கட்டிடத்தில் தாபிக்கப்பட்டிருந்த சுவடிக்கூடத் திணைக்களத்தின் சுவடிக்கூடம் மற்றும் அதிகார சபையின் சுவடிக்கூடம் என இரண்டு பிரிவுகளாக வேறுபடுத்தி முறைமையாகத் தாபிக்கப்பட்டுள்ளது. சுவடிகள் பாதுகாப்புத் திணைக்கள அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் புதிதாக நூல் அடுக்குத் தட்டுகள் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவு தொடர்பாகவும் வேறுபடுத்தப்பட்டுள்ளதுடன் ஒழுங்காகவும் முறையாகவும் பதிவுகளை ஒழுங்குபடுத்தி வைப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3

சுவடிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் சுவடிகள் பொறுப்பாளருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. எதிர்காலத்தில், சுவடிகள் பாதுகாப்புத் திணைக்கள அலுவலர்களின் கண்காணிப்பு மற்றும் அறிவுறுத்தல்களை கவனத்தில் கொண்டு மேலும் சுவடிகள் கூடத்தை மேம்படுத்தி முறையாக நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நூல் கட்டும் பிரிவை நவீனமயப்படுத்தி நிறுவனத்தின் எல்லா பிரிவுகளிலும் வெளியிடப்படும் அறிக்கைப் புத்தகங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3.5 சட்டப்பிரிவு

I. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றும்போது ஏனைய பிரிவுகளைப்போன்று சட்டப் பிரிவினாலும் அதற்கு அவசியமான உதவிகள் வழங்கப்படுகின்றன.

II. காணி மற்றும் வீடுகளுக்கு இறையிலி உறுதிகளை வழங்குதல்

III. தொடர்மாடி வீடுகளுக்கான உறுதிகளை வழங்குவதற்கு அவசியமான கூட்டுரிமைக் கூற்றைத் தயாரித்தல்

IV. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ஆதனங்கள் தொடர்பாக பொதுவாக சமூகத்துக்கு பாதகமான முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

V. அவசியமான சந்தர்ப்பங்களில் சில ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

VI. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளில் அனுமதியின்றி வசிப்போருக்கு எதிராக வழக்கு தொடர்ந்து சரியான உரிமையைப் வழங்குதல்.

VII. வெளிவாரி தரப்பினருக்கும் இந்த அதிகார சபைக்கும் இடையிலான நடவடிக்கைகளின்போது ஒப்பந்த உடன்படிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் ஏனைய உடன்படிக்கைகளைத் தயாரித்தல்.

VIII. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம், வாடகை நிலுவையாக உள்ளவர்களுக்கும் அனுமதியின்றி நிர்மாணங்களை மேற்கொண்டோர் மற்றும் அனுமதியின்றி வதிவோர் ஆகியோருக்கு எதிராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக வேறு தரப்பினர்களால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சட்ட ஆலோசனை வழங்குதல்.

IX. கடன் மற்றும் வாடகை தவணைப்பணங்களை வழங்காத வறிய கடன் தவணைப்பணம் செலுத்துவோருக்கு சட்ட நடவடிக்கை மேற்கொண்டு அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய பணத்தைப் பெறுதல்.

X. நொத்தாரிசுக் கட்டணம் மற்றும் வெளியேற்றல் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய பங்களிப்பைப் பெறுதல் போன்ற பல்வேறு விடயங்கள் சட்டப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

XI. மனித உரிமை மீறல் முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல

XII. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஆதனங்களை சட்டவிரோதமாக பயன்படுத்துவோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளின்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சட்டப்பிரிவின் உதவியை வழங்குதல்.

3.5.1 உறுதிகளை வழங்குதல்

I. பணம் முழுவதையும் செலுத்தி வீடமைப்புத் திட்டங்களில் வீடுகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இறையிலி உறுதி வழங்கும் நடவடிக்கைகள் பிரதானமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இதன்போது கூட்டு ஆதனங்கள், கூட்டு ஆதனங்கள் அல்லாதவை மற்றும் காணிகள் தொடர்பாக இறையிலி உறுதிகள் வழங்கப்படும்.

II. 2016ஆம் ஆண்டில் உறுதிகள் வழங்கும் வருடாந்த இலக்கு 3,000ஆக இருந்தபோதிலும் உறுதிகளை வழங்குவதற்காக சட்டப் பிரிவுக்குக் கிடைத்த கோவைகளின் எண்ணிக்கை 1937 மட்டுமேயாகும் என்பதுடன் அதில் 1851 கோவைகள் தொடர்பான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன.

III. இறையிலி உறுதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு 2016ஆம் ஆண்டிலிருந்து ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டமாக நாடு முழுவதிலும் உள்ள எல்லா மாவட்ட அலுவலகங்களிலும் குத்தகை உறுதிகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள உறுதிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

3.10 அட்டவனை

குத்தகை உறுதி வழங்குதல்

தொடர் இல.	மாவட்டம்	அனுப்பிய கோவைகளின் எண்ணிக்கை
01	கொழும்பு மாவட்ட அலுவலகம்	535
02	கொழும்பு நகரம் (தெற்கு)	1293

03	கொழும்பு நகரம் (வடக்கு)	5503
04	மாத்தறை	05
05	வவுனியா	205
06	சொய்சாபுர	24
07	கிளிநொச்சி	34
வழங்கப்பட்ட குத்தகை உறுதிகளின் எண்ணிக்கை (மொத்தம்)ஸ்ரீ		7599

3.11 அட்டவனை தலைமை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வழக்குகள்

நீதிமன்றம்	வழக்குகளின் எண்ணிக்கை
உயர் நீதிமன்றம்	05
மேன்முறையீட்டு நீதிமன்றம்	07
மேல் நீதிமன்றம்	07
மாவட்ட நீதிமன்றம்	01
நீதவான் நீதிமன்றம்	05
தொழில் நியாய சபை	05
கைத்தொழில் நீதிமன்றம்	01
மனித உரிமைகள்	01
மொத்தம்	32

3.6 திட்டமிடல் மற்றும் முன்னேற்றப் பிரிவு

வீடமைப்பு அபிவிருத்தியில் பாரிய எழுச்சிக்கு அவசியமான பின்புலத்தைத் தயார்செய்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 2015ஆம் ஆண்டில் ஆரம்பித்த "செமட்ட செவண வீடமைப்புத் திட்டம்" மிகவும் பரந்த அளவிலும் ஒழுங்காகவும் 2016ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வருடத்தில் 110,075 வீடுகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 6800.00 மில்லியன் செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டதுடன் அதற்காக விசேட வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்பத்தப்படுகின்றன.

கௌரவ அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சரவை செயலாளரின் தலைமையில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை நடத்தி மேற்கொண்ட தலையீட்டின் விளைவாக தலைவரை உள்ளிட்ட உயர் முகாமைத்துவத்தின் குறைபாடுகளைக் களைந்து இலக்குகளை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் காரணமாக 2016ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கை அடையக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம், 2016ஆம் ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 125,582 வீடுகளின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை, அவற்றுள் 102,176 வீடுகளைப் பூர்த்தி செய்வதற்கு முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதற்கிணங்க திட்டமிடப்பட்ட எல்லா வீடுகளினதும் வேலை ஆரம்பிக்க முடியுமானபோதிலும், 89 வீதமான வீடுகளை (101,176) பூர்த்திசெய்ய முடிந்தமை ஒரு வெற்றியாகும். அதற்கான செலவினம் ரூபா 6,122.67 மில்லியன் ஆகும் என்பதுடன் அதற்கான நிதிச் செயலாற்றம் 90மூ ஆகும்.

2016ஆம் ஆண்டில் வீடமைப்பு அபிவிருத்திக்காக கிடைத்த திறைசேரி நிதியம் ரூபா 5817.00 மில்லியன் ஆகும். அந்த நிதியை முழுமையாக அந்த வருடத்தினுள் வருமானம் குறைந்த குடும்பங்களுக்காக வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்துவதற்கு முடிந்தது. அதன்பிரகாரம், திறைசேரி நிதியத்தைப் பயன்படுத்தி பல்வேறு வீடமைப்புநிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 119,891 வீடுகளை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியாக தலையிட முடிந்தது.

மாதிரி கிராம நிகழ்ச்சித்திட்டம், விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அவற்றின் கீழான உப வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை (அதாவது, உதாகல கம்மான, சிறுநீரக நோயாளிகளின் குடும்பங்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், விதவைப் பெண்களுக்கான வீடமைப்புத் திட்டம்) பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்ட வீடுகளின் சுவர்களுக்கான பூச்சு வேலைகளுக்காக சீமெந்து வழங்குதல், வெலிஓய விசேட உதவி வேலைத்திட்டம் போன்ற பிரதான வேலைத்திட்டங்கள் பல திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட 1079.172 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி 20 மாவட்டங்களில் 147 மாதிரிக் கிராமங்களை செயற்படுத்த முடிந்த அதேவேளை, அதன் கீழ் தமக்கான ஒரு வீட்டைப் பற்றி ஏங்கிக்கொண்டிருந்த காணிகள் அற்ற 4641 குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிப்பதற்கு அவசியமான நிதி உதவியுடன் தொழில்நுட்ப உதவியையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வழங்கியதுடன் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய தரப்பினருடன் தொடர்புகொண்டு வழங்குவதற்கு முடிந்தமை 2016ஆம் ஆண்டில் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

2015ஆம் ஆண்டில் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கிடைத்த ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும்போது, 2016ஆம் ஆம் ஆண்டில் 25மூ அதிகமாக பெற முடிந்தது. 2015ஆம் ஆண்டில் கிடைத்த தொகை ரூபா 4536.288 மில்லியனும் 2016ஆம் ஆண்டில் கிடைத்த தொகை ரூபா 6072.00 மில்லியனும் ஆகும்.

பழைய வீடுகளை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 13 வீடமைப்புத் திட்டங்களை நவீனமயப்படுத்துவதற்காக இந்த வருடத்தினுள் திட்டமிடப்பட்டதுடன், அதற்காக திறைசேரி ஒதுக்கீடு ரூபா 240 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதற்கிணங்க, அந்தக் கருத்திட்டத்திற்காக ரூபா 303.676இற்காக மதிப்பீடு மேற்கொள்ளபபட்டு கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

3

3.12 அட்டவனை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

செமட்ட செவண வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

அபிவிருத்தி வேலைத்திட்டம் 2016

நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த இலக்கு		2016.12.31இல் பூர்தியடைந்தவை					
	பௌதீகம்	நிதி ரூ.மி.	பௌதீகம்		நிதி.ரூ.மி.	செயல் நிறைவேற்ற %		
			ஆரம்பித்தவை	முடிவடைந்தவை		ஆரம்பித்தவை	முடிவடைந்தவை	நிதி
1. திறைசேரி நிதியம்								
1.1 மாதிரிக் கிராமம்	4,500	1,125.00	4,641	259	1,079.172	103%	6%	96%
1.2 விசிறி வீடமைப்பு	26,000	3,687.50	34,619	17,715	3,563.450	141%	69%	103%
1.2.1. உதாகல கம்மான			1,180	207	135.633			
1.2.2. விதவைகள் விடமைப்பு			158	140	11.445			
1.2.3.சிறுநீரக நோ. வீடமைப்பு			700	1	74.560			
1.3. பூச்சு வேலைகள்	75,000	637.50	77,509	77,509	641.899	103%	103%	101%
1.4. வெலிஓயா விசேட வீடமைப்பு	1,000	350.00	1,084	42	310.845	108%	4%	89%
2. உள்ளக நிதியளிப்பு								
2.1. சம்பத் செவண வீடமைப்பு	2,575	900.00	3,729	2,145	271.506	145%	83%	30%
3. உதவி வீடமைப்பு								
3.1 செவண உதவி வீடமைப்பு		100.00	118	32	9.910	203%	12%	34%
3.2. செவண கிராமம்	500		896	27	23.815			
4. வேறு நதி - புற நிதிகள்			10		0.435			
4.1. நடுத்தர வகுப்பு வீடமைப்பு	500		672			134%		
5.உபஹார தொழில்பாட்டு செலவு		15.00			15.00			100%
உப மொத்தம்	**110,075**	**6815.0**	**125,316**	**98,077**	**6137.67**	**113%**	**90%**	**90%**
5. பழைய வீடமைப்புத் திட்டங்களை நவீனமயப்படுத்தல்	1,258	240.000		503	240.000		40%	100%
6. உறுதிகள் வழங்கல்								
6.1. இறையிலி உறுதி	3,000			1,851			62%	
6.2 குத்தகை உறுதி	2,000			7,599			380%	
மொத்தம்	**6,258**	**240.00**	**-**	**9,953**	**240.000**			
7. தொடரும் வேலைகள்	**4,126**	**324.590**	**266**	**3,099**	**190.726**		**75%**	**59%**
முழு மொத்தம்	**120,459**	**7364.590**	**125,582**	**111,129**	**6568.396**	**108%**	**91%**	**94%**

4

அறவீட்டுப் பிரிவு

4.1 அறவீட்டுப் பிரிவு

4.1.1 2016ஆம் ஆண்டில் செயற்பாடு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட கடன் மற்றும் கூலி வருமான மேம்பாடு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. வருடாந்த இலக்கை அடைதல், இலக்கை நிறைவேற்றுவதற்கு அவசியமான வழிகாட்டல், அதனுடன் தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கைகளை வெளியிடுதல், பயிற்சிகள் மற்றும் வாராந்த / வருடாந்த முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றின் குறைபாடுகளை அடையாளம் கண்டு தொடர்பான பரிகாரங்களை மேற்கொள்ளுதல் மற்றும் அவசியமான உதவிகள் வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

4.1 அட்டவனை
இலக்கை அடைதல்

	வருடாந்த அறவீட்டு இலக்கு (ரூபா. மில்)	நிறைவேற்றம் (ரூபா மில்.)	முன்னேற்றம் %
வருடாந்த கடன் தவணை	6821.727	3962.055	58%
வீட்டுக் கூலி (கிராமிய மற்றும் நகர)	429.051	159.151	37%
மொத்தம்	7250.778	4121.206	57%

4.1.2 2016ஆம் ஆண்டில் அறவீட்டை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

01. வருடாந்தம் திட்டமிடப்பட்ட அறவீட்டு இலக்கை மாதாந்தம் வார நாட்களில் குறித்த அறவீட்டு முகவரின் மட்டம் வரை சென்று அறவீட்டு இலக்கு நடவடிக்கையின் பிரகாரம் மாவட்ட அலுவலகத்துக்கு வழங்குதல்

02. வழங்கப்பட்ட இலக்கை அடைவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குதல், மாவட்ட அலுவலகத்துடன் எப்போதும் தொடர்புகொண்டு பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

03. அறவீட்டு இலக்கை நிறைவேற்றும் விதத்தை நாளாந்தம், வாராந்தம் மற்றும் மாதாந்தம் மீளாய்வு செய்தல் மற்றும் முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்து உயர் முகாமைத்துவத்தின் ஆலோசனைக்காக சமர்ப்பித்தல்.

04. அத்தகைய முன்னேற்ற அறிக்கையை மீளாய்வு செய்து மாவட்ட அலுவலகங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்து அறவீட்டை அதிகரிப்பதற்கு உதவி வழங்குதல்.

05. மாவட்ட அலுவலக மட்டத்தில் அறவீட்டு முகவர்கள் மற்றும் அலுவலர்களுக்கான செயலமர்வுகளை நடத்துதல்

06. மாதாந்த வருமான செயற்பாட்டுக் குழுக் கூட்டத்தை நடத்தி மாவட்ட அலுவலக மட்டங்களில் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும் அந்தக் குழுவின் அறிக்கையைப் பயன்படுத்தி குறைபாட்டுகளை நிவர்த்திப்பதற்கும் ஆலோசனைகளை வழங்குதல்.

07. தலைமை அலுவலகத்துக்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் இடையில் இணைப்பை மேற்கொண்டு அறவீட்டு நடவடிக்கைகளுக்காக உயர் முகாமைத்துவத்தின் உதவியை மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்குதல்

08. கடன்கள் மற்றும் கூலிகளை அறவிடுதல் தொடர்பான கொள்கையைத் தயாரித்தல் மற்றும் காலத்தின் தேவைக்கேற்ப சுற்றறிக்கைகளைத் திருத்துவதன் ஊடாக அறவீட்டை மேம்படுத்துவதற்கு மாவட்ட அலுவலகங்களுக்கு உதவுதல்.

4

09. வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொண்ட அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பணி புரியும் வீடமைப்புக் கடனாளிகளின் தவணைக் கட்டணங்களை சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

10. சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு முடியாத அரச நிறுவனங்கள் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் அறிவித்து அறவிட வேண்டிய தவணைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

11. அறவீட்டு முகவர்களுக்கு அறவிடவேண்டிய கடன் அளவை அறிவித்தல். அறவீட்டு நடவடிக்கைகளுக்காக புதிய முகவர்களை நியமித்தல் மற்றும் தவறுகின்ற முகவர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்புமாறு மாவட்ட முகாமைத்துவத்துக்கு அறிவித்தல்

12. அறவீட்டு நடவடிக்கைகளில் நிகழக்கூடிய நிதி துஷ்பிரயோகத்தைத் தவிர்ப்பதற்கான முடியுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஏற்படும் நட்டங்களை சம்பந்தப்பட்ட ஆட்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

13. அறவீட்டு முகவர்களுக்கான நம்பிக்கைக் காப்புறுதி மற்றும் போக்குவரத்து காப்புறுதி ஊடாக காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுதல்

14. அறவீட்டு முகவர்களுக்காக கவர்ச்சிகரமான தரகு நிதிகளை வழங்கி அறவீட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

15. கடன் அறவீடுகள் தொடர்பாக தினமும் கிடைக்கும் பொதுமக்களின் வேண்டுகோள்களை ஆராய்ந்து வழங்க முடியுமான நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கவேண்டிய நிலுவைகளை அறவிடுதல்

16. நிதி இலக்குகளை அடைவதற்காக அறவிடப்பட்ட கடன் தொகையை அதிகரிப்பதற்கு ஏற்றவாறு மாவட்ட மாவட்டங்கள் அதிக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

17. முழு வருமானத்தையும் இலக்காகக் கொண்டு ஆதனங்களின் வருமானத்தை அதிகரிக்கக்கூடியவாறு மாவட்ட அலுவலகங்களில் ஆதன பங்கீட்டை அதிகரிப்பதற்கு அறிவூட்டல்

18. மாவட்ட வருமானங்களை அதிகரிப்பதற்காக செயலமர்வுகளை நடத்துதல்

4.2 அட்டவனை

வீடுகள் மற்றும் கடைகளுக்கான தவணைக்கட்டணம் மற்றும் கூலிகள் அறவீட்டுச் செயற்பாடு - 2016

தொடர் இல.	மாவட்டம்	அளவு		%
		ஒதுக்கீடு	அறவீடு	
1.	தலைமை அலுவலகம்	20.444	27.227	133.18
2.	கொழும்பு நகரம் (வடக்கு) மாளிகாவத்தை	23.000	42.381	184.27
3.	கொழும்பு நகரம் (தெற்கு) மெனிங் டவுண்	55.650	49.558	89.05
4.	கொழும்பு மாவட்டம்	31.400	17.783	56.63
5.	கம்பஹா	25.350	36.289	143.15
6.	கண்டி	15.650	15.743	100.59
7.	மாத்தறை	15.200	2.924	19.24
8.	கல்முனை ∴ அம்பாறை வியாபார கட்டிடம்	1.250	1.671	133.68
9.	யாழ்ப்பாணம்	2.500	3.718	148.72
	மொத்தம்	190.444	197.294	103.60

4.3 அட்டவனை


தேசியவீடமைப்புஅபிவிருத்திஅதிகார சபை

(வீட்டுக்கடன் மற்றும் நகர,கிராமியவாடகை– 2016)

ரூ.மில்.

தொ. இல.	மாவட்டம்	வருடாந்த இலக்கு– கடன்	கடன் அடைவு	வருடாந்த இலக்கு– வாடகை	கூலி– அடைவு	வருடாந்த இலக்கு	அடைவு	%
1	கொழும்புநகரம் (வ)	32.759	15.748	50.361	20.447	83.120	36.195	44
2	கொழும்புநகரம் (தெ)	22.882	9.603	68.497	49.004	91.379	58.607	64
3	கொழும்புமாவட்டம்	892.701	447.987	68.447	17.817	961.148	465.804	48
4	கம்பஹா	572.846	259.907	76.402	37.792	649.248	297.699	46
5	களுத்துறை	558.140	293.050	2.858	0.919	560.998	293.969	52
6	கண்டி	544.898	305.823	18.972	11.454	563.870	317.277	56
7	மாத்தளை	163.659	128.845	0.17	0.013	163.829	128.858	79
8	நுவரெலிய	288.477	122.176	16.825	0.099	305.302	122.275	40
9	காலி	295.843	190.337	12.721	1.560	308.564	191.897	62
10	மாத்தறை	296.419	193.898	22.231	3.817	318.650	197.715	62
11	அம்பாந்தோட்டை	188.507	119.532	2.882	0.798	191.389	120.330	63
12	குருணாகலை	225.320	191.119	3.05	0.563	228.370	191.682	84
13	புத்தளம்	192.010	123.327	1.533	0.601	193.543	123.928	64
14	அனுராதபுரம்	247.797	173.891	0.093	0.002	247.890	173.893	70
15	பொலன்னறுவை	151.305	79.996	0.957	0.000	152.262	79.996	53
16	பதுளை	343.870	134.664	1.074	2.890	344.944	137.554	40
17	மொணறாகலை	481.271	182.981	3.528	1.397	484.799	184.378	38
18	இரத்தினபுரி	165.242	126.724	0.15	0.399	165.392	127.123	77
19	கேகாலை	234.303	200.958	2.5	0.376	236.803	201.334	85
20	மட்டக்களப்பு	154.442	96.206	11.035	0.139	165.477	96.345	58
21	அம்பாறை	245.952	116.932	28.275	0.729	274.227	117.661	43
22	திருகோணமலை	114.671	75.782	7.463	0.149	122.134	75.931	62
23	யாழ்ப்பாணம்	110.198	103.130	25.265	2.772	135.463	105.902	78
24	மன்னார்	63.292	40.260	1.409	0.392	64.701	40.652	63
25	வவுனியா	121.558	100.032	1.91	4.926	123.468	104.958	85
26	முல்லைத்தீவு	49.011	68.141	0		49.011	68.141	139
27	கிளிநொச்சி	64.354	61.006	0.443	0.096	64.797	61.102	94
	மொத்தம்	**6821.727**	**3962.055**	**429.051**	**159.151**	**7250.778**	**4121.206**	57

4


4.1 வரைபு
கடன் அறவீடு - 2001-2016
மி.ரூ
4500
4000
3500
3000
2500
2000
1500
1000
500
0
348.908
396.855
536.970
581.749
607.957
651.077
728.177
870.563
898.775
811.464
1159.882
1731.243
2199.306
2862.922
3488.591
3962.055
2001
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013
2014
2015
2016
வருடம்

4.2 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் ஆரம்பத்திலிருந்தே உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்குவதுடன் பிற்காலத்தில் அதன் விசாரணைப் பிரிவும் ஒருங்கிணைந்து செயற்பட்டது. இந்தப் பிரிவினால் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அதற்கு மேலதிகமாக நடைபெறும் விசேட கடமை மற்றும் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதன் பிரதான பணிகள் பின்வருமாறு:

1. முகாமைத்துவத்தினால் அடையாளம் காணப்பட்ட உள்ளக நிர்வாக முறைமை மேற்கொள்ளப்படுவது திருப்திகரமானதும் பயனுறுதியானதுமா என்பது தொடர்பாக பக்கச்சார்பின்றி தொடர்ச்சியாக மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

2. நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டம் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வுசெய்யும்போது இலக்காக் கொண்ட நோக்கத்தைக் கவனத்தில் கொண்டு அது எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என உயர் முகாமைவத்துவத்திற்கு அறிக்கை சமர்பித்தல்.

3. சம்பந்தப்பட்ட தகவல்களை தொகுப்பதற்கு பங்களிப்புச் செய்து உயர் முகாமைத்துவங்களுக்கிடைய ஓர் இணைப்பாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2016ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டன:

1. கணக்காய்வு விசாரணை

I. அரச கணக்காய்வு விசாரணைகள் 04
II. உள்ளகக் கணக்காய்வு விசாரணைகள் 82

2. விசாரணை நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

I. திடீர் அனர்த்தங்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் 14

II. துர்நடத்தை மற்றும் விசேட விசாரணை நடவடிக்கைகள் 49

3. ஆதனங்களைக் கையுதிர்த்தல் தொழிற்பாடுகள்

I. பரீட்சித்த உறுதிகளின் எண்ணிக்கை 1822
II. பரீட்சித்த 8/1 உறுப்புரை 2029
III. வேறு ஆதனங்கள் தொடர்பான பரிசீலனை நடவடிக்கைகள் 12

4. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள்

I. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டம் 06
II. வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சுக் கூட்டம் 04
III. கணக்காய்வுக்கு முந்திய மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 01

5. பிற அரச நிறுவனங்களின் விசாரணைகளுக்கு அவசியமான தகவல்களை வழங்குதல்

I. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு 03
II. நிதிக் குற்றவியல் விசாரணை ஆணைக்குழு 07
III. இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு 01

6. 2016ஆம் ஆண்டில் பணிக்கொடைக் கொடுப்பனவு தொடர்பான பரிசீலனை மேற்கொள்ளுதல் பணிக்கொடைக் கொடுப்பனவுக் கோவைகள்

7. வருமான மீளாய்வுக் குழு மற்றும் கொள்வனவுக் நடவடிக்கைகளில் கண்காணிப்பாளராக பங்குபற்றும் நடவடிக்கைகள்

4.3 தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் வீட்டு உரிமையாளர்களின் தொடர்பாடல் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு 2016 ஆம் ஆண்டில் பல்வகையான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களைநடைமுறைப்படுத்தியது.

தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு பின்வரும் பிரிவுகளைக்கொண்டு செயல்படுகிறது.

- தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு
- செவண ஊடக சேவை
- அச்சகப்பிரிவு

4.3.1 தகவல் மற்றும் பிரசார அலகு

2016 ஆம் ஆண்டில் தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு பின்வரும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் ஜனசெவண வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கையுடன் தொடர்புடைய தகவல் திரட்டல்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் வாயிலாக மக்களுக்கு தெரியப்படுத்தல்.
- செமட்ட செவண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016ஆம் ஆண்டில் 15 மாதிரிக் கிராமங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அவையாவன:

4

1. முல்லைத்தீவு வெலிஓயா இசுருபுர
2. அம்பாந்தோட்டை திஸ்ஸமஹராம சஹனகம
3. அம்பாந்தோட்டை சங்ஹிந்தகம
4. கண்டி தெல்தோட்டை ரண்கெத்கம
5. அம்பாறை நவகம்புர தயாபுர
6. மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று காமாச்சி கிராமம்
7. அம்பாந்தோட்டை திஸ்ஸமஹராம சம்பதகம
8. களுத்துறை புளத்திங்கள நவோதயாகம
9. பொலன்னறுவை திம்புலாகல நுவரகல
10. அம்பாதோட்டை திஸ்ஸமஹாராம சொபாசெத்கம
11. அம்பாந்தோட்டை செத்சந்தகம
12. பொலன்னறுவை திம்புலாகல சிரிசீலாலங்கார நாஹிமிகம
13. குருணாகலை பமுணாகொட்டுவ எதிரிமாணகம
14. அம்பாந்தோட்டை லுணுகம்வெஹெர சிதுமிணிகம
15. அனுராதபுரம் தலாவை தெவனபேதிஸ்கம

- மாதிரிக் கிராமம் திறக்கும் விழா, அடிக்கல் நடு விழா, செமட்ட செவண நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விழா ஆகியவற்றை உள்ளிட்ட தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் விழாக்களைத் திட்டமிடுதல், விளம்பரப்படுத்தல், ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்குதல் ஆகியவற்றை உள்ளிட்ட விழா ஏற்பாடுகள்.
- செமட்ட செவண நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான எல்லா விழாக்களிலும் நினைவு மலர்களைத் தயாரித்தல்.
- அதற்கு அவசியமான தகவல்கள் மற்றும் புகைப்படங்களை மாதிரிக் கிராமங்களுக்குச் சென்று சேகரித்தல்.
- விளம்பர நடவடிக்கைகளுடன் தொடர்பான எல்லா மாவட்ட அலுவலகங்களையும் ஒருங்கிணைத்தல்
- விழா தொடர்பான புகைப்படங்களை அச்சிட்டு 5ஆம் 6ஆம் மாடிகளில் உள்ள விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தல்
- உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் நடைபெறும் ஓவிய மற்றும் கட்டுரைப் போட்டிகள் தொடர்பான எல்லா ஒழுங்குகளையும் மேற்கொள்ளுதல்
- ஓவியங்களையும் கட்டுரைகளையும் பெறுதல், நடுவர்களின் தீர்ப்புக்கு அனுப்பி வைத்தல், வெற்றியாளர்களைத் தெரிவுசெய்தல் மற்றும் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களையும் கிண்ணங்களையும் தயாரித்தல்
- தினமும் பத்திரிகைகளில் வெளியாகும் வீடமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை பத்திரிகைகளிலிருந்து வேறாக்கி ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- தினமும் ஒலிபரப்பாகும் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைத் தயாரித்தலும் விளம்பரம் செய்தலும்
- காலையில் தேசிய கீதத்தையும் ஏனைய கீதங்களையும் பாடுதல்
- மக்களிடம் ஒப்படைக்கப்படும் கிராமங்கள் தொடர்பான புகைப்படங்களைக் காட்சிப்படுத்தல்
- வேறு விழாக்கள் தொடர்பான அலங்கார காட்சிகளுக்கு அவசியமான காட்சிக் கூடங்களை நிர்மாணித்தல்
- மாதிரிக் கிராம விழாக்கள் மற்றும் அதிகார சபையில் நடைபெறும் விழாக்கள் போன்ற நடவடிக்கைகளின் புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளுதல்
- மாவட்டங்கள் தொடர்பான அபிவிருத்தித் தகவல்களை உள்ளிட்ட புத்தகங்களை வெளியிடல்
- அபிவிருத்தி வேலைத்திட்டங்களுடன் தொடர்பான அறிக்கைகளை திரைக்காட்சிகளாகத் தயாரித்தல்
- அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்

4.3.2 செவண ஊடக பிரிவு

- 2016 ஆம் ஆண்டில் செவண ஊடக சேவை, நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், நரக குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை, கூட்டாதன முகாமைத்துவ அதிகார சபை, அரச பொறியியல் கூட்டுத்ததாபனம், நிர்மாண அபிவிருத்தி அதிகார சபை, அரச கைத்தொழிற்சாலைகள், கூட்டிணைக்கப்பட்ட அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட ஓசன் வியூ அபிவிருத்தி (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், களுத்துறை மாவட்ட செயலகம், மற்றும் கட்டிடத் திணைக்களம் ஆகியவற்றை உள்ளிட்டநிறுவனங்களின் பல்வேறு பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

- 2016 ஆம் ஆண்டில் செவண ஊடக சேவையின் வருடாந்த உத்தேச இலாபம் ரூபா 3.0 மில்லியனாகும். 2016 டிசம்பர் வரை கிடைத்த வருமானம் ரூபா 57.54 மில்லியனாகும் என்பதுடன் இலாபம் ரூபா 7.62 மில்லியன் ஆகும்.
- செவண ஊடக சேவையின் சகல சம்பாத்தியங்களும் "தலைவர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை" என்ற பெயரில் வேறு ஒரு கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் இந்தப்பணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்படும்.

4.4 அட்டவனை

செவண ஊடக சேவை


2016 ஜனவரி முதல் டிசம்பர் வரையான வருமானமும் இலாபமும்

மாதம்	வருமானம் (ரூ.)	,லாபம் (ரூபா.)
ஜனவரி	4,016,968.56	550,371.41
பெப்ரவரி	659,497.04	85,577.47
மார்ச்	1,105,787.68	149,430.75
ஏப்ரல்	4,001,062.11	545,119.05
மே	3,561,550.86	470,668.50
ஜூன்	6,122,535.27	797,162.25
ஜூலை	6,612,371.88	822,633.84
ஆகஸ்ட்	1,764,724.73	237,192.75
செப்டெம்பர்	4,804,605.47	655,616.25
ஒக்டோபர்	8,462,641.68	1,157,424.00
நவம்பர்	8,951,137.11	1,170,836.25
டிசம்பர்	7,481,164.04	983,921.25
மொத்தம்	57,544,046.43	7,625,953.77

4

4.2 வரைபு

2016 ஆம் ஆண்டிற்கான இலக்காக கொள்ளப்பட்ட வருமானம் 3.0 மி. ரூபாவாகும்.



4.3.3 அச்சக அலகு

இந்த அலகு ஜப்பான் அரசாங்கத்தின் ஆதரவுடன் 1985ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட எமது அச்சக ஊழியர்கள் மூவரின் உதவியுடன் நடத்தப்படுகின்றது. இந்த அலகின் மூலம்,

- தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுடன் தொடர்பான எல்லா ஆவணங்களையும் புத்தகங்களையும் அச்சிடல்
- மாதிரிக் கிராமங்களுடன் தொடர்பான உறுதிகளை அச்சிடல்
